இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest


நவம்பர் 2013 November | இதழ் 274 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



ஒட்டாவா - நன்றிக்கூடல்



ஆரம்பம்



மதிப்பளிப்பு

23 வது ஆண்டில்
23rd Year

Growing with the Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## வராது வந்த தலைவலி!

இலங்கை அரசாங்கம் வேண்டிக் கொண்டதற்கிணங்க, பொதுநலவாய அமைப்பின் தலைவர்களது 23வது மாநாடு இந்த மாதம் 15ம் திகதி முதல் 17ம் திகதி வரையும் அங்கு நடைபெறவுள்ளது.

1971ல் இதன் முதலாவது மாநாடு சிங்கப்பூரில் நடைபெற்றது. அதனையடுத்து இரண்டு மாநாடுகள் கனடாவில் நடைபெற்றன.

ஆசிய நாடுகளில் சிங்கப்பூர், இந்தியா, மலேஷியா ஆகியவற்றையடுத்து நான்காவது நாடாக இலங்கையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மிகவும் சிக்கலையும் மனித உரிமை அமைப்புகளின் கடும் எதிர்ப்பையும் தாண்டி இதனை நடத்துவதில் இலங்கை அரசு தனது முழுப் பலத்தையும் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது.

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்தில் இலங்கை புரிந்த மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டும் நாடுகள் அதனை இனஅழிப்பு என்று கூற விரும்பாவிட்டாலும், போர்க்குற்றமென்று கூறத் தயங்கவில்லை.

எண்ணுக்கணக்கற்றவர்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டது. மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் குடிபெயர்க்கப்பட்டு அவர்களின் சொத்துகள் அழிக்கப்பட்டது, ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வரையானவர்கள் காணாமற் போனது என்பவை இலங்கையின் அரச பயங்கரவாதத்தை அறியத்தந்தவை.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட இரு தீர்மானங்களையும் செயற்படுத்த முடியாதென இலங்கை அரசு பகிரங்கமாக அறிவித்துவிட்டது.

யுத்தத்தின்போது இலங்கையிடம் தோல்விகண்ட ஐ. நா அமைப்பு, தொடர்ந்தும் அங்கு தோல்வியையே சந்தித்து வருகின்றது.

மனித உரிமைகளை மதிக்காத, தனது குற்றங்களுக்கு பகிரங்கமான நீதி விசாரணையை ஏற்காத ஒரு நாட்டில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படக்கூடாது என்பது பலரதும் பொதுவான அபிப்பிராயம்.

இலங்கை அரசின் மனித குலத்துக்கு எதிரான போக்கை 22வது பொதுநலவாய மாநாட்டில் கண்டித்த கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர், அன்று சொன்னதை இப்போது நிறைவேற்றியுள்ளார். இந்த மாநாட்டை அவர் புறக்கணிக்கும் முடிவை நாம் வரவேற்கின்றோம்.

இந்தியா முழுமையாக இந்த மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமென தமிழ்நாடு சட்டசபை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. முதல்வர் ஜெயலலிதா இதனை முன்மொழிய, தி.மு.க சார்பில் ஸ்ராலின் வழிமொழிய, காங்கிரஸ் உட்பட அனைத்துக் கட்சிகளும் இதனை ஆதரித்தது ஒரு வரலாற்றுப் பதிவு.

இந்தியா இம்மாநாட்டில் பங்குபற்ற வேண்டுமென்று முன்னர் கூறிய வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனுக்கு வாய்ப்பூட்டுடன் காற்கட்டும் போடும் வகையில், மாநாட்டைப் பகிஷ்கரிக்கும் முடிவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்தது காலமுணர்ந்த நல்முடிவு.

தனது 'கொலைவெறி' முகத்துக்கு 'வெள்ளை' வர்ணம் பூச இந்த மாநாட்டைப் பயன்படுத்த மகிந்த ராஜபக்ஷ எடுத்த முடிவு, அவருக்கு ஒரு தீராத வலியாக மாறி வருவது அவர் எதிர்பார்க்காதது.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23வது ஆண்டு மலர் தயாராகிறது!

இருபத்து மூன்று ஆண்டுகளாகக் கனடாவில் மாதம் தவறாது வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகை, இன்னும் இரண்டு மாதங்களில் - எதிர்வரும் ஜனவரி மாதம் அகவை இருபத்து மூன்றினைப் பூர்த்தி செய்கின்றது.

வழக்கம் போல ஆண்டு மலர் வெளியீடு, 2014 பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ரொறன்ரோவில் நடைபெறும். 23வது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்புப் பணி துரிதமடைந்துள்ளது என்பதை எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் அறியத்தருவதில் மகிழ்வடைகின்றோம்.

கனடியத் தகவல்களையும், புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வியல் தகவல்களையும் ஆவணப்படுத்தும் தகவல் திரட்டாக சுமார் 160 பக்கங்களில் ஆண்டு மலர்கள் வெளிவருவதை அனைவரும் அறிவர்.

எனவே, இதற்கான கட்டுரைகள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில், 'தகவல்' என்பதை அடிப்படையாக வைத்து எழுதப்பட வேண்டியது அவசியம்.

மூத்தோர்கள், இளையோர்கள், மாணவர்கள் ஆகியோரும் எழுதலாம். இவர்களின் அனுபவங்கள்கூட பரிமாற்றத்துக்குரிய தகவல்களே.

அச்சாகும் ஆறாயிரம் பிரதிகளில் சுமார் ஆயிரம் வரையானவை இலங்கை மற்றும் தமிழீழம் உட்பட தமிழர் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் முப்பது வரையான நாடுகளுக்கு அனுப்பப்படுவது வழக்கம்.

தாயக பல்கலைக் கழக ஆசிரியர்கள் - மாணவர்கள் மத்தியில் 'தமிழர் தகவல்' பெரிதும் விரும்பப்படும் ஓர் ஆய்வுக்குரிய வெளியீடாக மதிக்கப்படுகின்றது.

23வது ஆண்டு மலருக்கான ஆக்கங்கள் 2013 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்கப்படும். அச்சடிக்கப்பட்டவைகளை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பலாம். கையெழுத்துப் பிரதிகளை தபாலில்:

Tamils Information,
P.O.Box - 3, Station - F,
Toronto, Ontario, M4Y 2L4
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

**முதன்மை ஆசிரியர்**
**416.920.9250**

## கனடாவும் அமெரிக்காவும் அகதிகள், குடிவரவாளர் தகவல்களை பரிமாற்றம் செய்ய இணக்கம்!

## Canada and US may share information on immigrants and refugee applicants

Ottawa and Washington are further aligning their border security by sharing personal information of immigrants and refugee applicants to both countries. This plan, to be fully implemented next fall, is raising privacy concerns over the disclosure and retention of informationm such as an applicant's date of birth, travel document number and fingerprints. The information sharing wouldn't apply to Canadian and American citizens or permanent residents.

தகவல் பரிமாற்றம் என்ற அடிப்படையில் புதிய குடிவாளர்கள் மற்றும் அகதிக் கோரிக்கையாளர்களின் தனிப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் பரிமாற்றம் செய்வதற்கு கனடிய - அமெரிக்க அரசாங்கங்கள் இணக்கம் கண்டுள்ளன. இதனடிப்படையில் இரு நாடுகளினதும் எல்லைப் பாதுகாவல் அதிகாரிகள் தங்களுக்குள் தகவல்களை அவ்வப்போது பரிமாற்றம் செய்ய வழிசெய்யப்படுகின்றது.

வெளிநாடுகளின் குற்றவாளிகளையும், அனுமதிக்கமுடியாத விண்ணப்பதாரிகளையும் கண்டுபிடித்து அவர்கள் உள்வரவும் குடியேறவும் தடுக்கும் நோக்கத்துடனான இந்த தகவல் பரிமாற்ற நடைமுறை அடுத்த இலையுதிர் காலத்தில் நடைமுறைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின் கீழ் ஒருவரது பெயர், சொந்த நாடு, முகவரி, பிறந்த திகதி, கடவுச் சீட்டு இலக்கம், கைவிரல் அடையாளம் போன்றவைகளை இரு நாடுகளும் தமக்குள் பரிமாற்றம் செய்யுமென்று தெரியவந்துள்ளது. ஆனால் கனடிய மற்றும் அமெரிக்க நாடுகளின் நிரந்தரக் குடிவரவாளர்களும், இரு நாடுகளினதும் பிரஜாவுரிமையுள்ளவர்களும் இந்த நடைமுறைக்குள் கொண்டுவரப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் தகவல் பரிமாற்றம் செய்வது புதிய நடைமுறையல்ல என்று சில குடிவரவாளர் அமைப்புகள் சுட்டியுள்ளன. தற்போதுள்ள நடைமுறையின் கீழ் சில குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே இதன்கீழ் கொண்டு வரப்பட்டனர். வருடமொன்றுக்கு சுமார் 3,000 வரையானவர்களின் தகவல்கள் மட்டுமே இதுவரை பரிமாற்றம் செய்யப்பட்டன.

ஆனால் புதிய திட்டமானது அனைத்துப் புதிய குடிவரவாளர்களையும், அகதிக் கோரிக்கையாளர்களையும் உள்ளடக்குகின்றது.

'ஒருவரது தனிப்பட்ட தகவல்களை தெரியப்படுத்துவது மிகவும் ஆபத்தானதும், தனிநபர் பாதுகாப்புச் சட்டத்தை மீறுவதுமாகும். அதனால் இதன் நடைமுறை விபரங்களை நுணுக்கமாக அவதானித்து வருகிறோம்" என்று கனடிய அகதிகள் கவுன்ஸிலின் அதிகாரி ஜனற் டெஞ்ச் தெரிவித்துள்ளார்.

'Information sharing between Canada and the US .... supports mutual efforts to facilitate legitimate travel and protect our common borders through improved screening of visitors before they enter our countries", said Alexis Pavlich, press secretary of Immigration Minister Chtis Alexander.

கனடாவில் அடுத்த பத்தாண்டுகளில் குடியேறத் தகுதியில்லாவர்களைக் கண்டுபிடிக்கவும் பின்னர் நாடுகடத்தவும் ஏற்படும் சுமார் 42 மில்லியர் டாலர் செலவை, இப்புதிய திட்டம் நீக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.●

செல்வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கவனயீனமான சாரதிகளால் ஒன்ராறியோ மாகாணத்தின் பெருந்தெருக்களில் கடந்த வருடம் 83 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. 2011ம் ஆண்டில் இவ்வாறு மரணமானோர் 56 பேர் மட்டுமே. அதேசமயம் 16,000 சாரதிகளுக்கு எதிராக கவனக்குறைவு குற்றத்துக்காக ஒன்ராறியோ மாகாண பொலிசார் 2012ல் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். ஒன்ராறியோ மாகாணப் பொலிசார் ரோந்து செய்யும் வீதிகளில் கவனக்குறைவினால் கடந்த வருடத்தில் 7533 வாகன விபத்துகள் இடம்பெற்றன.

ரொறன்ரோவில் அனுமதியில்லாத 'பகல்வேளை குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள்' பல அண்மைக்காலங்களில் திறக்கபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், பல நிலையங்களில் குழந்தைகள் சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லையென்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டபூர்வமானதும் அனுமதி பெற்றதுமான பராமரிப்பு நிலையங்களை ரொறன்ரோ நகரசபை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று நகர கவுன்சிலர்கள் கோரியுள்ளனர்.

கூட்டுறவு இல்லங்களில் குடியிருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்படும் மானியத்தில் வெட்டுக் கொண்டு வரப்போவதாக ஸ்டீபன் ஹார்ப்பர் அரசு அறிவித்துள்ளது. தற்போது கனடா முழுவதும் சுமார் ஐம்பதாயிரம் வரையானோர் குறைந்த வருவாய்க்கான மானியத்தில் குடியிருக்கின்றனர். மானியம் குறைப்படுகையில் குறைந்த வாடகையில் குடியிருக்கும் பலருக்கான சலுகை வெட்டப்படுகையில், அவர்கள் சந்தை நிலைவர வாடகை செலுத்த நேரிடும்.

ரொறன்ரோவில் நிலத்தின் கீழ் சேவையிலுள்ள சுரங்க ரயில் பாதைகளின் பெயர்களை பொதுமக்களின் நன்மை கருதி இலக்கங்களாக மாற்றும் திட்டமொன்றை ரொறன்ரோ போக்குவரத்து கமிஷன் ஆலோசித்து வருகின்றது. இதனை ரொறன்ரோ நகரசபை ஏற்குமானால், யங் - யுனிவோர்சிற்றி - ஸ்படைனா பாதை இக்கம் 1 எனவும், புளோர் - டன்போத் பாதை இலக்கம் 2 எனவும், ஸ்காபரோ - ஆர்.ரி பாதை இலக்கம் 3 எனவும், ஷெப்பர்ட் பாதை இலக்கம் 4 எனவும் மாற்றப்படும்.

இந்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதில்லையென முடிவெடுத்துள்ள கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், அந்த அமைப்புக்கு வழங்கும் நிதியையும் நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளார். நிதி வழங்குவதில் இரண்டாமிடத்திலிருக்கும் கனடா, வருடமொன்றுக்கு இருபது மில்லியன் டாலர்களை வழங்கிவந்துள்ளது. இதில் பெரும் பகுதி அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவின் சம்பளத்துக்கும் நிர்வாகச் செலவுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கனடாவில் புதிய தொழில் முயற்சியை ஆரம்பிக்கவிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் வேலையைத் துரிதப்படுத்த கனடிய குடிவரவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. ஆறு மாதங்களுக்கு முன்னரே இத்திட்டம் நடைமுறைக்கு வந்ததாயினும் இதுவரை எவருக்கும் விசா வழங்கப்படவில்லை. இதனை அமுல்படுத்தும்போது கணிசமான வெளிநாட்டவர்கள் பணத்துடன் இங்கு வந்து குடியேறுவதால் கனடாவின் பொருளாதாரம் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்காபரோ ஷெப்பர்ட் வீதி வரை ரொறன்ரோ சுரங்க ரயில் சேவையை விஸ்தரிப்பதற்கு ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்கள் 24 பேர் ஆதரவு வழங்கி அதனை நிறைவேற்றியுள்ளனர் 20 அங்கத்தவர்கள் இதற்கு எதிராக வாக்களித்தனர். இந்த ரயில் சேவை நீடிப்புக்கு கனடிய மத்திய அரசு 660 மில்லியன் டாலர்களை வழங்கியதையடுத்தே ரொறன்ரோ நகரசபை தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கும் முடிவை எடுப்பதற்காக சபையில் விவாதித்து வாக்கெடுப்பு நடத்தியது.

## புதிய தொகுதிகளில் போட்டியிடுவதற்கு தமிழர்கள் நாட்டம்

கனடிய நாடாளுமன்ற எல்லைகளின் மீள்வரையறுக்கப்பட்டு புதிய தொகுதிகள் அறிவிக்கப்பட்டதையடுத்து பல தமிழர்கள் போட்டியிடும் விருப்பத்தை அறிவித்து வருகின்றனர். அக்டோபர் மாத இறுதிவரை ஸ்காபரோ மற்றும் மார்க்கம் பிரதேசங்களில் போட்டியிட நான்கு பேர் முன்வந்துள்ளனர்.

ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதி இரண்டாக்கப்பட்டு, ஸ்காபரோ வடக்கு மற்றும் ஸ்காபரோ றூஜ் பார்க் எனப் பெயரிடப்பட்டுள்ளன. மார்க்கம் நகரசபை உறுப்பினராகவிருக்கும் லோகன் கணபதி ஸ்காபரோ வடக்கில் லிபரல் அபேட்சகராகப் போட்டியிட முன்வந்துள்ளார். ராதிகா சிற்சபைஈசனும் இதே தொகுதியிலேயே என். டி. பி. சார்பில் போட்டியிடவுள்ளார்.

ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதியில் லிபரல் வேட்பாளராகப் போட்டியிடும் விருப்பத்தை சட்டவாளர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். புதிய மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதியில் மார்க்கம் கல்விச்சபை உறுப்பினராகவிருக்கும் ஜுவனிதா நாதன் லிபரல் வேட்பாளராகப் போட்டியிடும் விருப்பத்தை அறிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் முதலில் தங்கள் கட்சியில் வேட்பாளர் நியமனத்துக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படவேண்டும். சிலசமயம் வேறு வேட்பாளர்களும் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் வேட்பாளர் நியமனத் தெரிவில் போட்டியிட வேண்டியது அவசியம்.

## கவனயீன சாரதிகளுக்கு தண்டப்பணத்தை அதிகரிக்க ஆலோசனை

கவனயீனமாகவும், திசை திருப்பும் சாதனங்களைப் பயன்படுத்தியும் வரும் சாரதிகளுக்கான தண்டப் பணத்தை அதிகரிப்பது தொடர்பாக ஒன்ராறியோ மாகாண அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. முக்கியமாகக் கைத்தொலைபேசி பாவனையே பல சாரதிகளது கவனக்குறைவுக்குக் காரணமென்று பொலிசார் தெரிவிக்கின்றனர். கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் செயற்படும் சாரதிகளுக்கு தற்போது விதிக்கப்படும் தண்டப்பணமான 155 டாலர்களை ஐநூறு டாலர்களாக அதிகரிக்க ஆலோசிக்கப் படுகின்றது. அத்துடன் புள்ளிகளையும் மேலும் குறைக்க மாகாண போக்குவரத்து அமைச்சு விரும்புகின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வருட மேயர் தேர்தலில் றொப் போ∴ர்ட் மீண்டும் போட்டி!



ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல் அடுத்த வருடம் (2014) நவம்பரில் நடைபெறவுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கொரு தடவை மக்களின் நேரடியான வாக்களிப்பினால் இவைகளுக்கு உறுப்பினர்களும் தலைவர்களும் தெரிவு செய்யப்படுவர்.

இங்குள்ள நகரசபைகளில் ரொறன்ரோவே பெரியதும் முக்கியமானதுமாகும். இதற்கு நாற்பத்துநான்கு உறுப்பினர்களும் மேயரும் தெரிவுசெய்யப்படுவர். 2010ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ரொறன்ரோ மேயர் றொப் போ∴ர்ட், அடுத்த வருட மேயர் தேர்தலிலும் போட்டியிடப் போவதாக கடந்த மாதம் அறிவித்துள்ளார்.

ஒரு புறத்தில் பிரபல்யமனவராகவும் மறுபுறத்தில் அடிக்கடி பிரச்சனைகளில் சிக்கி ஊடகங்களால் விமர்சிக்கப்படுபவராகவும் விளங்கும் றொப் போ∴ர்ட், கடந்த மூன்றாண்டுகளாக மேயராகத் தாம் ஆற்றிய பணி தமக்குப் பெரும் திருப்தியை அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ரொறன்ரோ நகரசபையின் 16ஆம் வட்டார உறுப்பினராகவும், ரி.ரி.சி எனப்படும் ரொறன்ரோ போக்குவரத்துச் சபையின் தலைவராகவும் பதவி வகிக்கும் கரேன் ஸ்ரின்ற்ஸ் (Karen Stintz) தாமும் ரொறன்ரோ மேயர் பதவிக்குப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். றொப் போ∴ர்ட் அணியில் இவர் இருந்தமையாலேயே இவரை மேயர் போ∴ர்ட் ரி.ரி.ஸி தலைவராக நியமித்திருந்தார். ஆனால் கடந்த சில மாதங்களாக இருவருக்குமிடையில் ஒத்துப்போகாமை பகிரங்கமாகத் தெரியவந்தது. இருவரும் கனடிய கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்தவர்கள்.●

## ரொறன்ரோ மத்தி உட்பட நாடாளுமன்ற நான்கு தொகுதிகளுக்கு இந்த மாதம் 25 திங்கள் இடைத்தேர்தல்

கனடிய நாடாளுமன்றத்தின் நான்கு தொகுதிகளுக்கு இந்த மாதம் 25ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இவற்றுள் ஒன்று பொப் றே (லிபரல்) பிரதிநிதித்துவம் செய்த ரொறன்ரோ மத்தி தொகுதி. கியுபெக்கில் பௌரசா தொகுதியின் உறுப்பினராகவிருந்த டெனிஸ் கொடெர் மொன்றியல் மேயர் தேர்தலுக்குப் போட்டியிடுவதற்காகத் தமது எம் பி. பதவியை ராஜினாமா செய்ததால் அங்கும் தேர்தல் நடைபெறுகின்றது.

மனிரோபா மாகாணத்தில் விக் ரோஸ், மேர்வ் ருவீட் ஆகிய இரண்டு கன்சர்வேடிவ் உறுப்பினர்களும் பதவி விலகியதால் இவர்களின் தொகுதிகளிலும் நவம்பர் 25ல் இடைத்தேர்தல் இடம்பெறுகின்றது.

ரொறன்ரோ மத்தி மற்றும் பௌரசா தொகுதிகளில் என். டி. பி வேட்பாளருக்கும் லிபரல் வேட்பாளருக்குமிடையில் கடும் போட்டி நிலவுகின்றது. ரொறன்ரோ மத்தி தொகுதியில் என்.டி.பி கட்சி சார்பில் பிரபல எழுத்தாளரும், சமூக நீதிக்காகப் போராடி வருபவரும், ஊடகவியலாளரான லின்டா மக்குவெக் போட்டியிடுகின்றார். இங்கு லிபரல் கட்சி கிறிஸ்ரியா பிரீலான்ட் என்பவரை நிறுத்தியுள்ளது.●

## தொடர்ச்சியான 36 வருடங்களின் பின் மிசிசாகா மேயர் ஹேசல் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார்



1978ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து கடந்த 36 ஆண்டுகளாகத் தொடர்ந்து முப்பத்தியாறு ஆண்டுகள் மிசிசாகா நகரின் மேயராகப் பதவி வகித்து வரும் ஹேசல் மக்கலின் (Hazel McCallion), அடுத்த வருடத்திலிருந்து தாம் ஓய்வுபெறவிருப்பதாக அறிவித்துள்ளார். 1921ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பிறந்த இவருக்குத் தற்போது 92 வயது.

கியுபெக்கிலுள்ள போர்ட் டாரியல் என்ற இடத்தில் பிறந்து அங்கேயே கல்வி கற்று பிரித்தானிய தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்த இவர், 1942ம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் கிளையொன்றை ரொறன்ரொவில் நிறுவுவதற்காக அனுப்பப்பட்டார். இங்கு 19 வருடங்கள் பணியாற்றிய பின்னர் அதிலிருந்து விலகி, அரசியலில ஈடுபட ஆரம்பித்தார். மிசிசாகாவின் மூன்றாவது மேயராகத் தெரிவான ஹேசல், 1978லிருந்து 12 தடவைகள் தொடர்ச்சியாக 2010 அக்டோபர் 25ல் நடைபெற்ற தேர்தல் வரை போட்டியிட்டு வெற்றிபெற்ற இவரது சாதனை இலகுவில் முறியடிக்க முடியாதது.

மிசிசாகா மேயராவதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அதன் நகர கவுன்ஸிலர்களில் ஒருவராகப் பணியாற்றியுள்ளார்.●

## மூன்று செனட்டர்களின் மோசடியால் ஹாப்பர் அரசின் செல்வாக்கு சரிவு!



கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பரினால் நியமிக்கப்பட்ட அவரது கட்சியைச் சேர்ந்த மூன்று செனட்டர்கள் புரிந்ததாகத் தெரியவந்துள்ள நிதிமோசடியால் அவரது அரசாங்கத்தின் செல்வாக்கு மெதுமெதுவாகச் சரிந்து வருவது தெரிகிறது. அண்மையில் பெறப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில் கன்சரவேடிவ் அரசு இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

பமிலா வல்லியன், மைக் டப்∴பி, பட்ரிக் பிராசியன் ஆகிய மூன்று செனட்டர்களுமே மோசடிகளில் அகப்பட்டு ஆர் சி. எம் பியின் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முதல் இருவரும் கனடிய தொலைக்காட்சி நிலையங்களில் பிரபல ஊடகவியலாளர்களாகக் கடமையாற்றியவர்கள்.

சம்பந்தப்பட்ட மூன்று செனட்டர்களுக்கும் ஊதியம் மற்றும் சகல அரசாங்க சலுகைகளையும் மருத்துவச் செலவுகளையும் நிறுத்துவதற்கான பிரேரணையொன்று கன்சர்வேடிவ் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை மூன்று செனட்டர்களும் முழுமையாக எதிர்த்துள்ளனர். ஆர். சி. எம். பியின் அறிக்கை வெளிவரும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடதென்பது இவர்களது வாதமாகவுள்ளது.

இந்த விடயம் இழுபட்டுக்கொண்டிருப்பதால் கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிரான தாக்குதல்களை என் டி. பி மற்றும் கனடிய லிபரல் கட்சிகள் முடுக்கி விட்டுள்ளன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# உயர் இரத்த அழுத்த இருதய நோய்

"இதென்ன புது நோயாக இருக்கு"

வந்தவர் தனது கையில் இருந்த றிப்போட்டை என்னிடம் நீட்டினார். இருதய நோய் மருத்துவ நிபுணருக்கு கொடுத்த கடிதத்திற்கு பதிலாக அவர் கொடுத்திருந்த சிட்டை அது. வழமையாக உயர் இரத்த அழுத்தத்திற்கு மருந்துகள் சாப்பிட்டு வருகிறார். அண்மையில் செய்த ஈசிஜி பரிசோதனையில் சில மாற்றங்கள் தெரிந்ததால் இருதய நோய் மருத்துவ நிபுணரிடம் அனுப்ப நேர்ந்தது. ECHO Cardiogram உட்பட பரிசோதனைகள் செய்த பின்னர் அவர் கொடுத்த குறிப்பில் Hypertensive heart disease என எழுதியிருந்தது. உயர் இரத்த அழுத்த இருதய நோய் என நாம் தமிழில் சொல்லலாம். பிரசரால் வரும் ஹாட் வருத்தம் என்று பேச்சுத் தமிழிலும் சொல்லலாம்.

உயர் இரத்த அழுத்த இருதய நோய்

பிரஷர் எனப்படும் உயர் இரத்த அழுத்தம் பற்றி எல்லோரும் அறிவார்கள். ஆனால் உயர் இரத்த அழுத்த இருதய நோய் பற்றி தெரிந்திருக்குமோ தெரியாது. உண்மையில் இது ஒரு தனியான நோய் அல்ல. உயர் இரத்த அழுத்தத்தினால் இருதயத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்குகிறது. அவற்றில் முக்கியமானவை மூன்று ஆகும்.

1.இருதயத்திற்கான இரத்த ஓட்டத்தில் பாதிப்பும் அதனால் நெஞ்சு வலி மாரடைப்பு போன்றவை ஏற்படுவது,

2.இருதயத் தசைநார்கள் தடிப்படைவது,

3.இருதயத்தின் செயற்திறன் பாதிப்படைவது ஆகியவையே அவை.

உயர் இரத்த அழுத்த இருதய நோய் பற்றி மருத்துவர்கள் இப்பொழுது அதிகம் கவனம் எடுப்பதற்குக் காரணம் என்ன? உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் மரணத்தைத் தழுவுவதற்குக் காரணமாக இருப்பது இந்த உயர் இரத்த அழுத்த இருதய நோய் என்பதாலேயே ஆகும்.

வயதானவர்களை எடுத்துக் கொண்டால் அவர்களில் 68 வீதமானவர்களுக்கு இருதய வழுவல் ஏற்படுவதற்கு உயர் இரத்த அழுத்த இருதய நோய்தான் காரணம் என ஆய்வுகள் கூறுகின்றன.

உயர் இரத்த அழுத்தம்

உயர் இரத்த அழுத்தம் என்பது அறிகுறிகளற்ற நோய். வெளிப்படையாக எந்த அறிகுறிகளையும் ஏற்படுத்தாது. அதனால் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படும்போதுதான் நோயாளிக்கு தெரிய வரும். ஆனால் அது உயர் இரத்த அழுத்த இருதய நோயை மட்டும் கொண்டுவருவதில்லை. கண் பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு, பக்கவாதம் போன்ற வேறு பிரச்சனைகளையும் கொண்டு வருகிறது.

எனவே ஒவ்வொருவரும் தங்கள் பிரஷரை அறிந்து வைத்திருப்பது அவசியம்.

• சாதாரண பிரஷர் என்பது 120/80 mmHg ஆகும்.

• இவ்வாறு சாதாரண அளவில் பிரஷர் உள்ளவர்களும் தங்கள் பிரஷரை குறைந்தது 2 வருடங்களுக்கு ஒரு முறையாவது அளந்து பார்ப்பது அவசியமாகும்.

• சற்று அதிகம் உள்ளவர்கள் (120/80 - 139/89) தங்கள் பிரஷரை வருடத்திற்கு ஒரு முறையாவது அளந்து பார்க்க வேண்டும்.

அதைவிட அதிகம் எனில் மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை தேவைப்படும். பிரஷருக்காக மருத்துவர்கள் சிபார்சு செய்யும் மருந்துகளை ஒழுங்காக உபயோகிப்பது அவசியம். தாங்களாவே அளவைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது. தலையிடி எனச் சொல்லி மருந்துகளின் அளவைக் கூட்டுபவர்களும், தலை உலாஞ்சுகிறது எனக் குறைப்பவர்களும் இருக்கிறார்கள். அவ்வாறு செய்வது தவறு. மருத்துவர்கள் பிரஷரை அளந்து பார்த்து அதற்கு ஏற்பவே மாற்றங்கள் செய்வார்கள்.

நீரழிவு, கொலஸ்டரோல் பிரச்சனைகளும் சேர்ந்திருப்பவர்கள் மேலும் அக்கறையோடு தங்கள் பிரஷரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது முக்கியமாகும்.

இருதயத்திலும் இரத்தக் குழாய்களிலும் ஏற்படும் பாதிப்புகள்

பிரஷரால் இருதயத்தில் பாதிப்புகள் ஏற்படுவது எவ்வாறு?

பிரஷர் அதிகரிக்கும்போது இருதயத்திற்கான வேலைப் பளு அதிகரிக்கிறது. அதிக அழுத்தத்தில் இரத்தத்தை பம் பண்ணுவதற்காக இருதயத்தின் தசைகள் அதிக பிரயாசை எடுக்க நேர்கிறது. இதனால் அதன் தசைகள் விரிவடைந்து தடிக்கின்றன. இதனால் முதலில் பருமனடைவது இடது கீழ் அறையான வென்றிக்கில் (Ventricle) ஆகும். இதை LVH என மருத்துவத்தில் சொல்வோம். இருதயத்தின் ஏனைய பகுதிகளிலும் காலகதியில் பாதிப்புகள் ஏற்படவே செய்யும். இவ்வாறு இருதயத்தின் தசைநார்கள் தடிப்படையும்போது பலவித பாதிப்புகள் ஏற்படுகின்றன. முக்கியமானது இருதயத்தின் தசைகளுக்கு இரத்தத்தை வழங்கும் குருதிக் குழாய்களில் தடிப்பு ஏற்படுவதாகும். அதனால் இருதயத்தின் தசைகளுக்கு போதிய இரத்தம் கிடைக்காது. இது நெஞ்சில் வலி, அழுத்தம், களைப்பு போன்ற அறிகுறிகளைக் கொண்டு வரலாம். இவை அஞ்சைனா மற்றும் மாரடைப்பை ஒத்த அறிகுறிகளாகும்.

இதைத் தவிர இருதயத்தின் தசைகள் தடிப்படையும்போது இருதயத்தின் நரம்புகளும் பாதிப்படையும். இதனால் இருதயத்தின் துடிப்பு லயத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

இருதய அறைகளின் வால்வுகளிலும் பாதிப்பு ஏற்படலாம்

உயர் அழுத்த நோயானது எவ்வாறு வெளிப்படையான அறிகுறிகளைக் காட்டுவதில்லையோ அதே போல உயர் இரத்த அழுத்த இருதய நோயும் ஆரம்ப நிலையில் துல்லியமான அறிகுறிகளை காட்டுவதில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல கீழ்கண்ட பாதிப்புகள் ஏற்படும்.

இருதய செயலிழப்பு

இந்நோயால் இருதயத்தின் தசைகள் தடிப்படையும் என்பதைப் பார்த்தோம். இது தீவிரமாகி இருதயத்தின் செயற்பாடு பாதிப்புறும் வரை வெளிப்படையான அறிகுறிகளைக் காட்டுவதில்லை. இருதயத்தின் செயற்பாடு குறைவதை இருதய செயலிழப்பு எனவும் சொல்வார்கள். பெதுவாக 'ஹார்ட் பெயிலியர்' (heart failure) என்பார்கள்.

இதன் முக்கிய அறிகுறியானது மூச்சு விடுவதில் சிரமம் ஆகும். இத்தகைய இளைப்பு அல்லது மூச்சுத் திணறல் ஆனது பொதுவாக ஏதாவது வேலை செய்யும்போது ஏற்படும். நடக்கும்போது, படியேறும்போது, பாரம் தூக்குவது போன்ற உடலுக்கான முயற்சிகளின் போது ஏற்படும். ஆனால் நோய் தீவிரமடையும்போது எதுவித உடல் முயற்சிகள் இல்லாது படுத்திருக்கும்போது கூட இளைப்பு ஏற்படும். ஆரம்ப நிலையில் நோயாளிகள் இதனை இளைப்பு என்று நினைக்கமாட்டார்கள். சாதாரண களைப்பு என்றுதான் நினைப்பார்கள். போசாக்கு

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்


# அம்மா, நீ வென்றுவிட்டாய்!

ஓர் எழுத்தாளரைப் பற்றி நினைக்கும்போது மனதில் என்ன தோன்றுகிறது? அதுதான் முக்கியம். அலிஸ் மன்றோ பற்றி நினைத்துப் பார்த்தபோது அவருடைய கலகல சிரிப்பொலிதான் ஞாபகத்துக்கு வந்தது. பேசிவிட்டு சிரிப்பார் அல்லது சிரித்துவிட்டு பேசுவார். நான் சந்தித்தபோது அவருக்கு வயது எழுபத்தைந்து. குழந்தைப் பிள்ளைபோல சிரிப்பு. இன்று, 82 வது வயதில், 2013ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அவருக்கு கிடைத்துள்ளது.

ஏழு வருடங்களுக்கு முன்னர் ஒரு காலை நேரம் அவர் என்னை தொலைபேசியில் அழைத்தார். கனடாவில் சந்தைக்காரர்கள் அதிகாலையிலேயே தங்கள் வேலையை ஆரம்பித்துவிடுவார்கள். தொலைபேசியில் "நீங்கள் இதை வாங்குங்கள். உங்களுக்கு மட்டும் 50 வீதம் கழிவு கிடைக்கும்" என்று தொந்திரவு கொடுப்பார்கள். நான் அசட்டையாக டெலிபோனை எடுத்து "என்ன வேண்டும்?" என்று கேட்டேன். அப்பொழுது அவர் "நான் அலிஸ் மன்றோ பேசுகிறேன்" என்றார். அவர் வெளிநாடு போவதால் திரும்பி வந்ததும் எனக்கு ஒரு செவ்வி தருவதாக ஒப்புக்கொண்டார். அவருடைய தொலைபேசி எண்ணை தந்தபோது கிட்டத்தட்ட நேர்காணல் முடிந்துவிட்டது என்று மகிழ்ச்சியில் திளைத்தேன்.

அது எத்தனை தவறு. அவர் கொடுத்த கெடு தாண்டியதும் அவருடைய தொலைபேசி எண்ணை அழைத்து தகவல் விட்டேன். பதில் இல்லை. மறுபடியும் தகவல் விட்டேன் பதில் இல்லை. நான் விட்ட தகவல்கள் எல்லாம் ஒன்றன்மேல் ஒன்றாக கிடந்தன. அவர் தகவல்களைக் கேட்பதில்லை என்ற விசயம் எனக்கு பின்னர்தான் தெரியவந்தது. நேர்காணல் தள்ளிப்போனது. அந்தச் சமயம் அவருடைய கூட்டம் ஒன்று பற்றி பேப்பரில் விளம்பரம் வந்தது. 35 டொலர் நுழைவுக்கட்டணம் கொடுத்து அந்தக் கூட்டத்துக்கு போனேன். எப்படியும் அவரைச் சந்தித்து நேர்காணல் செய்யவேண்டும் என்பதே என் நோக்கம். "ஒருநாளைக்கு ஒரு நன்மையாவது செய்யவேண்டும்." இது அவருடைய மந்திரம் என்பதைப் படித்திருந்தேன். கூட்டம் முடிந்ததும் அவருடைய மந்திரத்தை ஞாபகப் படுத்தியதும் உடனேயே சம்மதித்தார். அப்படியே அவருடைய நேர்காணலை அடுத்த நாள் டெலிபோன்மூலம் நடத்தி முடித்தேன்.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது அலிஸ் மன்றோ சொன்ன ஒரு விசயம் ஆச்சரியமூட்டியது. "எழுத்து எழுத்து என்று இவ்வளவு காலமும் ஓட்டிவிட்டேன். இனிமேல் எழுதுவதை நிறுத்தப்போகிறேன். என்னாலே என் அலுவல்களைக் கவனிக்க முடியவில்லை. அந்தந்த மருந்துகளை அந்தந்த நேரத்துக்கு எடுக்கவேண்டும். தேகப்பியாசம் செய்வது, வீட்டைத் துப்புரவாக்குவது, சமைப்பது, குப்பைகளை அகற்றுவது எல்லாமே பெரும் சுமையாகத் தெரிகிறது" என்றார். என்னால் நம்பமுடியவில்லை. எழுத்தாளரால் எப்படி எழுதுவதை நிறுத்தமுடியும். எழுதுவதுதானே அவர் மூச்சு. நான் நினைத்தது சரிதான். எழுதுவதை நிறுத்தப்போகிறேன் என்ற உரைக்கு பின்னர் அவர் எழுதி மூன்று புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. எழுத்தாளரால் எழுதுவதை நிறுத்தவே முடியாது. 'Dear Life' என்ற தொகுப்புதான் தன்னுடைய கடைசி நூல் என்று அலிஸ் மன்றோ சொல்லியிருக்கிறார். அதை அவசரப்பட்டு நம்பக்கூடாது. அவருக்கு கிடைத்த பரிசுகளை பட்டியலிட்டால் அதுவே ஒரு பக்கத்துக்கு மேலே வரும். ஆளுநர் பரிசை மூன்று முறையும், கனடாவின் அதி உயர் இலக்கியப் பரிசான கில்லெர் விருதை இரண்டு தடவையும் பெற்றவர். உலக அளவில் பொதுநல நாடுகள் எழுத்தாளர் பரிசு, ரில்லியம் புத்தகப் பரிசு என்று எல்லாவற்றையும் இவர் பார்த்துவிட்டார். இது தவிர மான் புக்கர் சர்வதேச விருது 2009ம் ஆண்டு கிடைத்தது. இப்பொழுது இலக்கியத்தின் அதி உச்சமான நோபல் பரிசும் கிடைத்துவிட்டது. கடந்த பத்து வருடங்களாக எதிர்பார்த்த விருது இது. இலக்கியத்துக்காக கனடிய எழுத்தாளர் ஒருவருக்கு கிடைத்த முதல் நோபல் பரிசு. (ஸோல் பெல்லோவுக்கும் இலக்கியத்துக்காக நோபல் பரிசு கிடைத்தது. ஆனால் அவர் கனடாவில் பிறந்த அமெரிக்க எழுத்தாளர்.) இலக்கியத்துக்காக நோபல் பரிசுபெற்ற 13வதுபெண் எழுத்தாளர். இவர் புதுமைப்பித்தனைப்போல, Jorge Luis Borges போல சிறுகதைகள் மட்டுமே முக்கியமாக எழுதியவர். நோபல் பரிசு அங்கீகாரம் சிறுகதை இலக்கியத்துக்கு கிடைத்த அங்கீகாரம்.



அவரிடம் நான் ஒருமுறை கேட்டேன். "உங்களுடைய சிறுகதைகளைப் படிக்கும்போது அழகான வசனங்களின் கீழே அடிக்கோடிடுவேன். ஆனால் சமீபத்தில் நீங்கள் ஓரிடத்தில் உங்கள் கதைகளில் அழகான வசனங்கள் வரும் இடங்களை வெட்டிவிடுவீர்கள் என்று படித்திருக்கிறேன். அது உண்மையா?" அவர் சொன்னார். "அழகான வசனம் அல்ல. கெட்டிக்காரத்தனமாகத் தோன்றும் வசனம். அல்லது திரும்பத்திரும்ப மினுக்கப்பட்ட அலங்காரமான வசனம். அவற்றை நான் விரும்புவதில்லை. அகற்றிவிடுவேன். காரணம் ஒரு கதையை சொல்லும்போது அந்தக் கதைதான் முக்கியம். ஓர் அலங்காரமான வசனம் வாசகருடைய கவனத்தை கதையின் மையத்திலிருந்து திருப்பிவிடும். ஆனால், கதை முடிவை நோக்கிச் செல்லும்போது வசன அமைப்பு முக்கியமாகிறது. அந்த வசனம் சொல்வது அதில் உள்ள வார்த்தைகளின் சேர்க்கையிலும் பார்க்க அதிகமாக இருக்கவேண்டும். அதை வரவேற்பேன். ஒரு வசனம் அது சொல்ல வந்ததிலும் பார்க்க கூடச்சொல்லவேண்டும். ஆனால் வன்னவேலை எனக்கு பிடிக்காது." அப்பொழுது நான் "நீங்கள் வெட்டியெறிந்த வசனங்களையெல்லாம் எனக்கு தரமுடியுமா?" என்று கேட்டேன். அவர் பெரிதாக சத்தம்போட்டு சிரித்தார்.

"நோபல் பரிசு புனைவு இலக்கியத்துக்கு மட்டும்தானே கொடுக்கிறார்கள். அது அவ்வளவு முக்கியமானதா?" என்று அவரை ஒருதடவை கேட்டேன். அவர் சொன்னார். "புனைவிலே கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது. செக்கோவை நான் எப்பொழுது வேண்டுமானாலும் படிப்பேன். சமீபத்தில் டோல்ஸ்டோயுடைய 'போரும் சமாதானமும்' நூலை மறுபடி படிக்கத் தொடங்கியிருக்கிறேன். இது ஒருதடவை படித்துவிட்டு மூடிவைக்கும் சமாச்சாரம் அல்ல. புனைவு படிப்பதுதான் என்னுடைய மூளைக்கு வேலை கொடுக்கிறது. மனநிலையை தளரவைக்க அபுனைவு படிக்கிறேன். ஆதிகாலத்தில் இருந்து இன்றுவரை மனிதன் புனைவு இலக்கியத்தில்தான் நாட்டம்

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

37

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற சங்க காலப் பாடலில் பொதிந்திருக்கும் கருத்து எவ்வளவு உண்மை உள்ளது' எமது நன்மையும் தீமையும் மனத்தின் செயல்பாட்டினால் ஏற்படுகிறது என்பதே இதன் விரிவாகும். அதாவது எமது செயற்பாடு அத்தனையும் மனத்தின் வெளிப்பாடு ஆகும். கிரேக்க தத்துவஞானி சாக்கிரட்டீஸ் 'உன்னையே நீ அறிவாய்' என்ற கூறியது இதற்கு வலுச்சேர்க்கிறது. 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்ற வள்ளுவரின் சிந்தனையும் இதனுடன் ஒத்துப் போகிறது.
சிலர் முழுமைபெற முடியாமல் நிலைகுலைந்து போவதற்குக் காரணமே மனம்தான். உலோகாயுத வாழ்வு வாழத் துடிப்பதும், வெறும் உடலின்பத்திற்காக அலைவதும், 'எனக்கு நிகர் எவருமில்லை' என மனப்பால் குடிப்பதும் அவர்களுக்குப் பழகி விட்டது. எம்மால் நிம்மதியாக ஒரு தியானம்கூட செய்ய முடிவதில்லை. காரணம் சிலர் பற்றுக்களை அறுக்கவே தியானம் செய்யப்படுகிறது எனத் தவறாகக் கூறி வருகின்றனர். ஆனால் பல நிமிடங்களாவது மனதினை எம்மால் ஒன்றுபடுத்த முடியவில்லை என்பதே உண்மையாகும்.

'மனிதன் தனக்குத்தானே நண்பனும், பகைவனுமாகிறான்' என உபநிடதம் கூறுகிறது. மிகவும் கடினமான, பெரியதான பரீட்சை எதுவென்றால், அடைக்கப்பட்டிருக்கும் நாம், நம்முடையதேயான சிந்தனைகளின் சிறைச்சாலையிலிருந்து விடுதலை அடைவதுதான். ஆழத்திலிருந்து உள்ளுணர்வின் முன்னோக்கிய அங்கமாக மனம் மாறிட வேண்டும். எமக்கு எழும் சந்தேகங்கள், தொல்லைகள் என்பவற்றினை உடனடியாக துடைத்துவிட வேண்டும். மூளை ஒரு நாடகமேடை எனக் கொண்டால் சிந்தனைகளே அதிலுள்ள நடிகர்கள், எம் மனதைப் பிரதிபலிக்கும் நாங்களே பார்வையாளர்கள்.
விடாப்பிடியாக நாம் எவ்வளவு அழுத்தத்துடன் முயற்சித்தாலும் எமது மனதைக் கட்டுப்பாட்டில் வைக்க முடியாது ஆனால் பொறுமையாக அதனைப் பழக்கப்படுத்த முடியும். எம்மைப்பற்றி வேறொருவர் வந்து விளக்கிவிட முடியாது. எங்களைப் பற்றி எமக்கே தெரியும். உள்ளிருக்கும் மனமே நாம். அதாவது எமது மனத்தின் செயற்பாடுகள், வெளிப்பாடுகள், குறைகள், நிறைகள், கோணல்கள், வசீகரங்கள் - இவற்றின் மொத்த வடிவமே நாம்.

மூச்சு என்பது இயல்பானதுதான். ஆனால், இயல்பற்றுவிட்டால் இருமலாய், இழுப்பாய் மாறி விடுகிறதல்லவா? இதுபோன்றதுதான் எமது மனமும் இயல்பானதுதான். ஆனால் சூழலால் தனது இயக்கத்திலிருந்து தடுமாறுகிறது. மனதின் தாக்கங்களையும், தடுமாற்றங்களையும் அறிந்து கொண்டால், மனம் நம்வசம். எதனையும் உளவியல் ரீதியாக பார்த்துக் கொண்டால், மனத்தின் சக்திகளைப் புரிந்து கொண்டால் எமது வாழ்வினையும் நலப்படுத்திக் கொள்ளவும் முடியும். மனம் அலைகள் ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளாக இல்லாது ஆழம் நிறைந்த சமுத்திரமாக சலனமற்று இருக்க வேண்டும் இதுவே நல்லதொரு வாழ்வுக்கு வழி.

மனதை ஆனந்தமாக வைத்திருக்க, நகைச்சுவையின் நீரூற்று அவ்வப்பொழுது இருக்க வேண்டும்.
மீண்டும் சந்திப்போம் ●

செலுத்தியிருக்கிறான். தலைமுறை தலைமுறையாக புனைவுக் கதைகள்தான் சொல்லியிருக்கிறான். எந்த மொழியிலும் பழம்பெரும் இதிகாசங்கள் எல்லாம் புனைவுதானே."

அலிஸ் மன்றோவுடைய சிறுகதைகள் மிக நீண்டவை. ஆகவே தமிழ் மொழிபெயர்ப்பில் அவர் சிறுகதைகள் அதிகம் படிக்க கிடைப்பதில்லை. அவர் என்னிடம் கேட்டார். "என்னுடைய சிறுகதைகளை உங்கள் மொழியில் மொழிபெயர்ப்பது சுலபமா?" நான் சொன்னேன். "மிக எளிது. உங்கள் வசன அமைப்பு தமிழில் மொழிபெயர்ப்பதற்கு இலகுவானது. ஆனால் உங்கள் கதைகள் நீண்டுபோய் இருப்பதால் அவற்றை பிரசுரிப்பது கடினம். உங்கள் கதைகளின் நீளம் 70 பக்கம், எங்கள் சிறுபத்திரிகைகளின் முழு நீளம் 60 பக்கம்தான்" என்றேன். அவர் மறுபடியும் சிரித்தார்.

நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்ட செய்தியை அவரிடம் தெரிவிப்பதற்கு நோபல் கமிட்டியின் செயலாளர் ஸ்வீடனில் இருந்து தொலைபேசியில் அவரை அழைத்தார். வழக்கம்போல அலிஸ் மன்றோ டெலிபோனை எடுக்கவில்லை. ஆகவே 1.2 மில்லியன் டொலர் நோபல் பரிசு விவரத்தை செயலாளர் தகவல் மெசினில் விட்டார். இது ஒன்றும் அறியாத அலிஸ் மன்றோ ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். நடு இரவு அவருடைய மகள் டெலிபோனில் அழைத்து. "அம்மா, நீ வென்றுவிட்டாய்" என்று கத்திய-போதுதான் அவருக்கு விசயம் தெரிந்தது.

நானும் செய்தி கிடைத்தபோது அலிஸ் மன்றோவை அழைத்து தகவல் பெட்டியில் என் வாழ்த்தை தெரிவித்தேன். நோபல் கமிட்டி செயலாளர் விட்ட தகவலுக்கு மேல் என் தகவலும் காத்திருக்கும். எப்போதாவது ஒருநாள் அலிஸ் மன்றோ அதைக் கேட்பார்.

## 'புறொஸ்ரேற்' பரிசோதனை 40 வயதில் அவசியம்

ஆண்களின் அதிவேக உயிர்கொல்லி நோயாக மாறிவரும் 'புறொஸ்ரேற்' நோயைக் கட்டுபடுத்துவதற்காக ஆண்கள் ஒவ்வொருவரும் 40 வயதானவுடன் அதற்கான Prostate Specific Antigen எனப்படும் வைத்திய பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது. கனடியர்களில் 34 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 87 வீதமானோர் இந்நோய்க்கான அறிகுறி அச்சத்தை வெளியிட்டதே இதற்குக் காரணம். ஒவ்வொரு வருடமும் கனடிய ஆண்களில் 23,600 பேர் இந்த நோய்க்கு ஆளாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# முழுநேர பாலர் வகுப்புகளின் தாக்கம்
# Impact of Full Day kindergarden

2010-2011 கல்வியாண்டில் முதன்முறையாக முழுநேர பாலர் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு மூலகாரணமாக அமைந்தவர் அன்றைய Early Learning Advisor Charles Pascal என்பவராகும். என்றுமே கல்விச் சீர்திருத்தங்கள், மாற்றங்கள் ஏற்படும் பொழுது நிதி ஒதுக்கீடே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் அக்காலகட்டத்தில் 240,000 பாலர் வகுப்பு மாணவர்கள் இருந்தபொழுதும் 35,000 மாணவர்களுக்கே இந்த நிரலைப் பரீட்சார்த்தகரமாக வழங்க முடிந்தது. பெற்றோருக்கும் இந்நிரல் பற்றிய போதிய விளக்கம் காணப்படாததால் இதுபற்றிய பல ஐயப்பாடுகள் தோன்றத்தான் செய்தன.

இப்பொழுது இந்நிரல் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிய பின்பு 125 பாடசாலைகளைச் சார்ந்த 700 மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. இந்த ஆய்வினை நடத்திய McMaster மற்றும் Queens University யினர் "With our best future in mind" என்ற தலைப்பில் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளனர். பல கல்விமான்கள், திறமைசாலிகள், பெற்றோர்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர். Early Childhood Educator Margaret McCain "It is like winning the gold at the Olympics" என்று கூறியுள்ளார். ஒலிம்பிக் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்றெடுத்ததற்குச் சமன் என அவர் புகழ்வதாயிருந்தால் எத்தகைய தன்மையுடையதாக இந்த அறிக்கை இருந்திருக்கும் என்பது புலனாகிறது.

முழுநேர பாலர் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பாக முதலாம் வகுப்புக்கு வரும் குழந்தைகளில் 27 வீதமானவர்கள் பாடசாலையில் தோல்வியடையும் சாத்தியக்கூறுகள் காணப்பட்டன. பின்பு இவர்களில் பெரிய மாறுதல்கள் ஏற்படவேயில்லை. இவர்கள் ஒருபோதும் வெற்றியைக் கண்டதில்லை. இதில் வியப்புக்குரிய விடயம் யாதெனில், இந்த 27 வீதம் நன்றாகச் செயற்பட முடியாமல் தத்தளிக்கும் பிள்ளைகளில் 60 வீதம் பிள்ளைகள் வருமானம் குறைவான குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளாக இல்லை. ஆகவே வருமானம் மாத்திரமே காரணம் எனக் கொள்ள முடியாது. பல பெற்றோர்கள் மத்தியில் நேரமின்மை, குடும்பப் பிரச்சனைகள், ஒற்றைப் பெற்றோரால் பராமரிக்கப்படுதல் முதலிய பாதிப்புகள் காணப்படுகின்றன. சமூகத்தில் நல்ல மட்டத்தில் வாழ முடியாத பெற்றோர்களினதும், உளமுதிர்ச்சிப் பிரச்சனைகளால் பாதிக்கப்படும் பெற்றோர்களினதும் பிள்ளைகளால் (Social Competence, Emotional Maturity Issues) ஒருபொழுதும் ஏனைய மாணவர்களோடு ஈடுகொடுக்க முடிவதில்லை. ஆனால் முழுநேரப் பாலர் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 27 வீதமாக இருந்த இப்பிரச்சனை 20 வீதமாக குறைந்துள்ளது. ஆகவே பல பெற்றோர்களுக்கும் முழுநேர பாலர் வகுப்புகள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இந்நிரலை ஆரம்பிக்கும்பொழுது கல்விச்சபைகள் தொடர்ச்சியான ஒரு நிரலை வழங்க வேண்டுமென விரும்பினர் (Seamless extended day). அதாவது பாடசாலை நேரத்தில் கீழ்பிரிவு பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் தகைமைகள் உள்ள ஆசிரியர்களால் பாடபோதனை நடத்தப்படும். இவர்களுடன் சேர்ந்து சிறுபிள்ளைகளின் போதனையாளர் எனப்படும் உதவியாளர்களும் (Early Childhood Educators – ECE) தொழிற்படுவார்கள். இரண்டு ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் போதனை நடத்துவதால் பிள்ளைகள் பாரிய நன்மைகளைப் பெற வாய்ப்புண்டு. ஒவ்வொரு பிள்ளையினதும் தனிப்பட்ட திறமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப திட்டமிட்ட ஒரு நிரலை வழங்க முடியும். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட மேற்பார்வையும், கற்றல் வசதிகளும் கிடைக்கும். பாடசாலை தொடங்குவதற்கு முன்பும் பின்பும் ECE ஆசிரியர்களே கற்பிப்பார்கள். முன்பெல்லாம் பாடசாலை தொடங்குவதற்கு முன்பும், பாடசாலை விட்டபின்பும் தனிப்பட்ட பாலர் பராமரிப்பு நிலையங்களில் வழங்கப்பட்ட நிரல்களுக்கும் பாடசாலைகளில் வழங்கப்பட்ட நிரல்களுக்கும் இடையே ஒரு தொடர்ச்சி காணப்படவில்லை. அது மாத்திரமல்ல ஒரே இடத்தில் இவை இரண்டும் வழங்கப்படும்போது மாணவர்களுக்கு அலைச்சலும் கஷ்டங்களும் ஏற்படாமல் இருக்கிறது.

இவ்வாறு தொடர்ச்சியான ஒரு நிரலை வழங்க ரொறன்ரோ கல்விச் சபை விரும்பியபோதும் அவ்வாறு அமுல்படுத்த முடியவில்லை. பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் சரியான திருத்தங்கள் (Reforms) இன்னும் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. வாட்டர்லு பகுதிகளில் இத்தகைய Seamless Approach காணப்படுகிறது. அங்கு 2700 மாணவர்கள் இதனால் பயன் அடைகிறார்கள். ரொறன்ரோவில் காலப்போக்கில் இப்பிரச்சனை நிவர்த்தி செய்யப்படலாம்.

இன்று ஒன்ராறியோவில் 96வீத முழுநேர பாலர் பிரிவு (கீழ்பிரிவில்)க்குச் செல்லும் பிள்ளைகள் விளையாட்டோடு கூடிய நிரல்களிலும், உணவு, ஆறுதல் நிரல்களிலும் பங்குபற்றுகிறார்கள் (Play based program, with nutrition and rest breaks). இதனால் பெரும் தொகை பணம் செலவாகிறது எனக் குறை கூறுபவர்களும் உள்ளனர். ஆனால் இதனை ஒரு முதலீடாகவே கருத வேண்டும். ஏனெனில் சிறு வயதிலேயே பிள்ளைகளை சரியான வழியில் கற்றலில் ஈடுபடுத்தினால், உயர் வகுப்புகளில் அவர்கள் நன்றாகச் செயற்படுவார்கள். இன்று இந்த நிரல் ஒரு (World class play based program) விளையாட்டோடு கூடிய ஒரு திறமான நிரலாகக் கணிக்கப்பட்டுள்ளது. பிள்ளைப் பராமரிப்பு வெற்றிடங்களுக்காகப் பெற்றோர் மிகவும் சிரமப்படும் நேரத்தில் பாடசாலையே JK, SK பிள்ளைகளுக்கு இதனை வழங்குவதால் வெற்று இடங்கள் பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் தோன்ற வாய்ப்பு உள்ளது. ஆயினும் ரொறன்ரோவில் தேவைக்குக் குறைவாகவே இவ்விடங்கள் உள்ளதால் பெரிதாக வெற்றிடங்கள் ஏற்படவில்லை.

கல்வி மந்திரி Liz Sandals – "விளையாட்டோடு கூடிய முழுநாள் கற்றல் நிரல் பலன் அளிக்கும், மாணவர்களும் பாடசாலை கற்றலுக்கு ஆயத்தமாக இருப்பார்கள்" எனப் பல வருடகாலமாக கல்விமான்கள் அபிப்பிராயப்பட்டபோதும், ஓர் ஆய்வு இக்கூற்றினை நம்ப வைக்கத் தேவையாக இருந்தது. அத்தகைய ஒரு நேரம் இப்பொழுது ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார். இன்று முழுநேர பாலர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் மொழி, சிந்தனை விருத்தியில் 75வீத முன்னேற்றமும், சமூகநெறிகள், தொடர்பு நெறிகளில் 50வீத முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. இவை பாடசாலை வாழ்க்கையில் மாத்திரமல்ல, பிற்கால வாழ்க்கைக்கும் உதவியாக அமையும். நான்காவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் இந்த நிரலுக்கு இன்னுமே போதிய இடமோ, நிதியோ வழங்கப்படவில்லை. இவை பூரணமாகக் கிடைக்குமென்றால்தான் எல்லாப் பிள்ளைகளும் பயன் அடைய முடியும். குழந்தை பராமரிப்பு நிலையங்களிலும் மேலதிக வெற்றிடங்கள் தோன்ற வாய்ப்புண்டு.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# மா..நாடு?

தீவில் ஒரு மாநாடு ஆரம்பிக்கப்போகின்றது? எனினும் தீர்வில் ஒரு மாநாடு என அது முடிவுறப்போவதில்லை!

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மகாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழை நேசிக்கும் அரசியல் ஆய்வாளர்களும் தமிழர் நலம் நாடும் ஊடகங்களும் வலியுறுத்தி வருவதற்கு இதுவே காரணமாகும்.

மனித உரிமைகளை மிகவும் பாரிய அளவில் மீறியது, தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான நிலைத்தன்மை கொண்ட தீர்வொன்றைக் காண முயற்சிக்காதது, சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதது, தமிழ் மக்களுடன் நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது, மீள்குடியேற்றம், மறுவாழ்வு, போராளிகளின் புனர்வாழ்வு என்பனவற்றில் அக்கறை காட்டாதது போன்ற குற்றச்சாட்டுகள் இலங்கை அரசுக்கெதிராக ஓங்கி ஒலிப்பது உலகம் முழுக்க கேட்கிறது.

அதனால்தான் 54 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் பொது நலவாய நாடுகளின் மகாநாட்டை தடை செய்ய வேண்டும் அல்லது வேறு நாட்டிற்கு மாற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வலுப்பெறுவதில் நியாயம் இருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

பிரித்தானிய பேரரசின் கீழ் இருந்த 53 சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பே பொதுநலவாய நாடுகள் (Commonwealth) எனப்படும்.

சிங்கப்பூர்(1971) கனடா(1973) ஜமேக்கா(1975) இங்கிலாந்து(1977) ஸாம்பியா(1979) ஆவுஸ்திரேலியா(1981) இந்தியா(1983) பஹாமஸ்(1985) இங்கிலாந்து(1986) கனடா(1987) மலேசியா(1989) ஸிம்பாப்வே(1991) சைப்பிரஸ்(1993) நியூஸிலாந்து(1995) இங்கிலாந்து(1997) தென் ஆபிரிக்கா(1999) ஆவுஸ்திரேலியா(2002) நைஜிரியா(2003) மோல்டா(2005) உகன்டா(2007) ரினிடாட் டோபாகோ(2009) ஆவுஸ்திரேலியா(2011) என இதுவரை 22 பொதுநலவாய மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

2009ம் ஆண்டு ரினிடாட் டோபாகோவில் நடைபெற்ற மாநாட்டில் 2013ம் ஆண்டு மாநாட்டை இலங்கையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட 51 நாடுகளில் இந்தியா உட்பட 45 நாடுகள் இத் தீர்மானத்தை ஆதரித்தன. பின்னர் 2011ல் ஆவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கையில் 2013ல் நடத்துவதென்பது உறுதி செய்யப்பட்டது.

மனித உரிமைகள் சீர் குலைவதாக குற்றம் சுமத்திய கனடா, பிரித்தானியா, நியூஸிலாந்து உட்பட 6 நாடுகள் இத் தீர்மானத்தை எதிர்த்தன. அத்துடன் பொதுநலவாய ஊடகவியலாளர் சங்கம், பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு, பொதுநலவாய நீதிபதிகள் சங்கம், பொதுநலவாய சட்ட வல்லுனர்கள் சங்கம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ.நா.மனித உரிமை பேரவை போன்றனவும் தமது எதிர்ப்பைக் காட்டியிருந்தன.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூடும் 23 வது மாநாடு கொழும்பில் நவம்பர் 15 முதல் 17 வரை இடம் பெறவுள்ளது. தாமரைக் குளம் என தமிழில் அர்த்தம் கொண்ட சிங்கள பெயருள்ள (Nelum Pokuna) பிரமாண்டமான அரங்கமொன்றை சீனா 2430 கோடி செலவில் கொழும்பில் நிர்மாணித்துள்ளது. மகிந்த ராஜபக்ஷே அரங்கம் என்றும் அழைக்கப்படவுள்ள அதிலும், பண்டார-நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்திலும், பத்ரமுல்லயில் உள்ள 'வாட்டர்ஸ் எட்ஜ்' அரசினர் விடுதி உள்ளரங்கிலும் பொதுநலவாய மாநாடுகளின் நிகழ்ச்சிகள் நிகழவுள்ளன. 10 முதல்14 வரை கலாசார நிகழ்வுகள் விருந்தினர்க்கு விருந்து வைக்கும்.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என கனடா பிரகடனம் செய்தது. ஒவ்வொரு மாநாட்டுக்கும் 20 கோடி டாலரை வழங்கும் வழமை கொண்ட கனடாவின் இந்த முடிவால் மாநாட்டுக்கு முன்னரே அதனை இழந்ததாக கணக்குப்பார்க்கின்றது இலங்கை. பிரிட்டானியாவும் கணிசமான தொகையை வெட்டப்போவதாக வெருட்டியுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவியான எலிஸபெத் மகாராணி கடந்த 40 வருடங்களில் முதற் தடவையாக இம்முறை மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார். வயோதிபம் அதற்கு காரணமாயிற்று. இளவரசர் சாள்ஸ் பங்குபற்றவுள்ள இந்த மாநாட்டில் மகாராணியின் வாரிசுகளே எப்பொழுதும் தலைமையில் இருக்க வேண்டும் என்ற பிரேரணையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எந்த நாட்டில் பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாடு நடைபெறுகின்றதோ அந்த நாட்டின் தலைவர் அக் கூட்டத் தொடருடன் அடுத்த இரு வருடங்களுக்கு தலைமையில் தொடர்வார் என்பது சம்பிர-தாயம். அதன்படி தற்பொழுது தலைமை தாங்குபவர் ஆவுஸ்திரேலியாவின் முன்னைய பிரதமர் ஜுலியா ஜில்லட் ஆவர். ஜுலியா பிரதமராக இருந்த பொழுது ஆவுஸ்திரேலியாவில் கடந்த பொதுநலவாய மாநாடு நடைபெற்றி-ருந்தது. பின்னர் பிரதமர் பதவியை ரோனி அப்போட்டிடம் அவர் இழந்திருந்தாலும் பொது நலவாய அமைப்பின் தலைமையை இழப்பதில்லை. புதிய தலைவராக மகிந்த ராஜபக்ஷே பொறுப்பேற்பார்.

1884ம் ஆண்டு முதல் பல்வேறு செயற்திட்டங்களை கொண்டிருந்தாலும் 1931 ல் இங்கிலாந்து கனடா தென் ஆபிரிக்கா அயர்லாந்து ஆகிய நாடுகளுடன் பிரித்தானிய பொது நல நாடுகள் அமைப்பு என் பெயர் பெற்றது. 1971 ம் ஆண்டு சிங்கப்பூரின் முதல் மாநாட்டுடன் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு என நிலையான பெயருடன் விஸ்தாரம் பெற்றது. 10 பில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் மிகப் பெரிய நாடாக கனடா உள்ளது. 1.1 பில்லியன் சனத்தொகையுடன் இந்தியா அங்கம் வகிக்கின்றது.13.000 மக்களுடன் நவ்ரு என்ற நாடும் பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் உள்ளது. மார்ச் மாதம் இரண்டாவது திங்கட்கிழமை பொதுநலவாய நாடுகளின் அமைப்புகளின் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அடுத்த மாநாடு 2015 ல் மொரிஸியஸில் நடைபெறும். தற்போதைய பிரதமர் நவின் ராம்கூலாம் அப்போதும் பிரதமராகவிருந்தால் அப்பொழுது பொதுநலவாய நாடுகளின் தலைமை அவரைச் சென்றடையும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# வாழ்வைத் தேடும் சுந்தர்கள் 9

'தமிழர் கடும் உழைப்பாளிகள்'
என்ற கருத்து பொதுவாகவே
வாழ்புலங்கள் எங்கும் நிலவுகின்றது.
இயல்பாகவே முயற்சிமிக்க தமிழர்
வாழ்புலங்களில் இருப்புக்காக நடத்திய
போராட்டங்களில் பெருமுனைப்புக் காட்டினர்.

பௌதிக பண்பாட்டுச் சூழல்களுக்கு ஏற்ப, தம்மை உருமாற்றிக்கொண்டு தளராத இதயங்களோடு புதிய வரலாறொன்றில் பயணித்தனர்.

முன்பின் பார்த்தறியா இயந்திரங்களோடும், பழகியறியா உணவகச் சமையற்கூடங்களிலும் இரண்டறக் கலந்தனர். சொட்டிய வியர்வையையும் குருதியையும் பணமாக்கப் படாதபாடுபட்டனர்.

எம் முன்னோடிகள் பலரும் விரும்பிக் குடிபெயர்ந்தவர்கள் அல்ல. அரசியற் சூழல்களும், பொருளாதாரப் பின்னணிகளும் அவர்களை நாடுகடத்தின. வந்திங்கு விழுந்து, வகையறியாது, வாழ்வு பிடிக்காது துடித்தபோதும் தப்பித்து எங்கு ஓட...?

ஒன்ற மனம் மறுத்தாலும் உயிர்பிழைத்தலுக்காக வயப்பட்ட வாழ்வோடு ஓட்டி ஓடவேண்டியிருந்தது.

"இயற்கை இழந்த
இயந்திரம் விழுங்கிய
தலைநகரில் எனது
நாட்களை இழக்க
நிர்ப்பந்திக்கப்பட்டேன்"

என்ற பாமினியின் 'நினைவுத்தொடர்' என்ற தலைப்பிலான கவிதை வரிகள் வாழ்புலத்தின் வாழ்வியல் நிர்ப்பந்தத்தை வெளிப்படுத்துகின்றன.

வாழ்புல வாழ்வை 'இரண்டாவது பிறப்பு' எனக் கவிஞர்கள் சுட்டுவது மிகப்பொருத்தமாக இருக்கின்றது. உடல் உயிர், உணர்வு இவை மூன்றையும் தவிர, முற்றிலும் புதிதான புலத்தில் மீண்டும் வாழத்தொடங்குவது இரண்டாம் பிறப்பே.

வாழ்புலம் நோக்கிய பயணம் பலருக்கும் ஒருவழிப்பாதையே. சிறையென எதுவும் இங்கு இல்லையாயினும் சிறைப்பட்டது போன்ற உணர்வுகளே மேலோங்கிக்கிடந்தன. அந்த உணர்வுகளில் இருந்து தப்பிக்க எந்த வழிகளும் இருக்கவில்லை. வாழ்ந்துதான் வாழ்வை வென்றாகவேண்டியிருந்தது.

"கரைந்துகொண்டிருக்கின்றது காலம்
வெயில்நேரத்துத்
தெருக்களில் உறைந்த
பனிக்கட்டிகளைப் போல,
.............

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்தில் தேடும் சுந்தரர்களாய்
இரண்டாம் பிறப்பெடுக்கத்
தற்கொலை புரிந்தவர்கள்
கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாய்.."

அருந்ததியின் இந்தக் கவிதை இரண்டாம் பிறப்பெடுத்தோரின் 'சுந்தர' த் தேடல்களைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கனடாவில் குடியேறியோரின் இயந்திர வாழ்வு, இருப்பின் வலுநிலையைக் கடந்த பின்னரும் வசதிமிக்க வாழ்வைத் தேடியோடுவதாக வ.ஐ.ச. ஜெயபாலன் கீழ்க்காணும் கவிதையில் குறிப்பிடுகின்றார்.

"பாவம் என் நண்பர்கள்
முன்னர் வந்திருந்தபோது
ரொறன்ரோ அடிநகர் பொந்துகளில்
வாழ்வு இல்லை என்றார்கள்.
வாழ்வு நிறைந்த ஸ்காபரோ வீடுகளை மடக்க
மூன்று வேலை செய்தார்கள்.

இம்முறை வந்தபோது
வாழ்வு பற்றிய புதிய கண்டுபிடிப்புகளோடு
வரவேற்றார்கள்.
416 தொலைபேசி வட்டத்துக்குள்
அது இல்லை என்றார்கள்
905 வட்டத்துக்குள் அது இருக்கின்றது என்றபடி,
மூன்றாவது வேலை தேடி அலைந்தார்கள்.
அவர்களது பெரிய வீடுகளும்
பெரிய கார்களும் பெருமூச்சு விட்டபடி
வெறுமையாய் கிடந்தன."

இருப்பை வலுவாக்கிக்கொள்ளும் நோக்கில் முயற்சியின்றியும், முயன்று தோற்றும் வாழ்வை அழித்துக்கொண்டோர் சிலர் இருக்கத்தான் செய்தனர். இவர்களில் தற்கொலை செய்தோரும், மனநல மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டோரும் அடங்குவர்.

வாழ்புல இருப்பு வலுவான பின்னரும் எம் முன்னோடிகள் சிக்கல்களுக்குள்ளிருந்து விடுபட்டாரில்லை. பல வடிவங்களில் அவைகள் எம் முன்னோடிகளைத் தொடர்ந்தன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## சொன்னால் வெட்கம்; சொல்லாவிட்டால் துக்கம்!

தமிழர்கள் நிரம்பி வாழும் ரொறன்ரோவில் நேரில் கண்டு வெட்கப்பட்ட மூன்று நிகழ்வுகள் ஒரே பர்வையில்:

நண்பரொருவரின் தாயாரின் மரணச் சடங்கு. இறந்தவரின் சடலம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அங்கு வந்த எழுத்தாளர் ஒருவர் தாம் அஞ்சலியுரை நிகழ்த்தலாமாவென வினவுகின்றார். தமது தாயாரைப் பற்றி எதுவுமே தெரியாதவர் என்ன பேசப்போகிறார் என எண்ணிய நண்பர், ஒருவாறு அவருக்கு என்னவோ கூறி அமர்த்தி நிறுத்திவிட்டார்

பிரபல புள்ளி ஒருவரது குடும்பத்தின் திருமணச் சடங்கு வைபவத்துக்கு பெரிய 'பிரேம்' போட்ட வாழ்த்துப்பாவுடன் வந்த அந்த ஆள், ஒருவரையும் கேட்காது அதனை வாசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில், மணமகனின் தந்தை ஏதோ சொல்லி ஒருவாறு அதனை நிறுத்தி அந்த ஆளை இறக்கிவிட்டார்.

அரங்கேற்றமென்றுக்கு தமது மன்றத்தின் சார்பில் சிறு பட்டயத்தை வாசித்து வழங்க மேடையேறிய 'பிரமுகர்', அந்த நிமிடத்திலிருந்து 'தற்புகழ்' பாடி அறுவோ அறுவென்று பதினாறு நிமிடங்கள் அறுத்துவிட்டு, இறுதியில் சபையினரின் கைதட்டல் அர்த்தத்தைப் புரிந்து மெதுவாக இறங்கிச் சென்ற பரிதாபத்தைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

## மயிலேறும் பெருமாள் மயிரேறும் பெருமாள் ஆகி....

வடமாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் சும்மா ஒரு 'புதுமை' செய்வதற்காக முள்ளிவாய்க்கால் சென்று மருத்துவர் மயிலேறும் பெருமாள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தார் என்பது செய்தி.

கொழும்பின் சிங்களப் பத்திரிகையொன்று பெயரைச் சரியாகப் புரியாமல், 'மயிரேறும் பெருமாள்' (Hair raising) என்று எழுதி இன்னொரு புதுமை செய்துள்ளது.

மருத்துவர் மயிலேறும் பெருமாள் முன்னர் வல்வெட்டித்துறை வைத்தியமனையில் பணியாற்றியவர். தேசியத் தலைவரின் தாயாருக்கு இறுதியாக இங்கு வைத்தியம் புரிந்தவரும் இவரே.

'தனக்கறியாத் தமிழ், பத்திரிகைக்குச் சேதம்' என்பது புதுமொழி!

## வாய்திறக்காத மன்மோகனுக்கு 'செல்' போன் எதற்காக?

அடுத்தவன் வீட்டு விடயத்தை ஒற்றுக் கேட்பதென்பது அமெரிக்காவுக்கு ஒரு பொழுதுபோக்குப்போல!

முன்னாள் ஜனாதிபதி நிக்சன் பதவிக்கால 'வாட்டர்கேட்' ஊழல் தொலைபேசி ஒற்றுக் கேட்ட 'ஸ்பை' சமாசாரம்தான்.

தனது நட்பு நாடுகள் முப்பத்தைந்தின் தலைவர்களின் தொலைபேசிகளை ஒற்றுக் கேட்ட விடயம் இப்போது வெளிச்சத்துக்கு வந்து ஒபாமா நிர்வாகத்தின் தலையை உருட்டத் தொடங்கியுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் 'செல்' தொலைபேசியும் மின்னஞ்சலும் இல்லை என்பதால் அவர் தப்பிவிட்டார் என்று புதுடில்லி நிம்மதி மூச்சு விடுகிறது.

அது சரிதான்! வாய் திறந்து பேசத் தெரியாய மன்கோகனுக்கு எதற்காக 'செல்' போன்! எதுவுமே எழுதிப் பழக்கமில்லாத அவருக்கு எதற்காக மின்னஞ்சல். எப்போதும் தமது 'விளையாட்டுகளை' மற்றவர் தலையில் தள்ளி தப்பி விடுவதுதான் அவரின் பழக்கமாச்சே!

## சாம்பியன் 'பியர்' குடிமகன் குடித்துக் குடித்துப் போனார்

இருபது நிமிடங்களில் அதிகமான 'பியர்' யார் குடிப்பது என்பதுதான் போட்டி. இருநூறுக்கும் அதிகமானவர்கள் இறுதிச் சுற்றில் வந்தனர்.

முடிவில் வெற்ற பெற்ற கிரேசியா (45) என்ற ஸ்பானியர், இருபது நிமிடங்களில் ஆறு லிட்டரைக் குடித்து பெருங்குடிமகன் சாம்பியனானார்.

அடுத்த நிமிடமே சரிந்தவர் தொடர்ந்து வாந்தி எடுத்தார். குடித்த பியரை விட எடுத்த வாந்தி அதிகம். சிறிது நேரத்தில் அயர்ந்தார். குறட்டைவிடும் ஒலியும் பலமாகக் கேட்டது. அதன் பின்னர் அவர் எழும்பவேயில்லை. 'காலமானார்' என்று ஒரு வார்த்தையில் டாக்டர்கள் கையை விரித்தனர்.

## போட்டியிட ஆட்களில்லை; இதற்குப் பெயர் ஒற்றுமை

நா.க.த.அ என்ற அமைப்பின் முதற் பதவிக்காலம் முடிய, இரண்டாவது காலத்துக்கு நியமனங்கள் கோரப்பட்டது.

இதன் போக்கில் பலரும் விரக்தியடைந்திருப்பதால், போட்டியிட ஆட்கள் முன்வரவில்லை. ஒருவாறு 'அண்ணை வா, தம்பி வா' என்று சிலரை இழுத்து இடங்களை நிரப்பி விட்டார்கள். இதனால் தேர்தல் நடைபெறவில்லை.

தமது அமைப்புக்கு மக்கள் ஒற்றுமையாக ஆதரவு வழங்கி அனைவரையும் போட்டியின்றித் தெரிவு செய்ததாக கயிறு திரித்துள்ளார் அதன் தலைவர் ருத்திரா.

## 'பிளையர்' உதவியுடன் வாகனம் ஓட்டிய விண்ணன்!

தொடர்ந்து மதுபோதையில் அகப்பட்டுத் தண்டனை பெற்றும் திருந்தாத சாரதி ஒருவரின் வாகனத்தின் 'ஸ்டேரிங்'கை நீதிமன்ற உத்தரவின் பேரில் அகற்றி விட்டனர்.

ஆனாலும் அந்தச் சாரதி சுருண்டு படுத்து விடவில்லை. ஒரு 'பிளையரை' எடுத்து 'ஸ்டேரிங்' இடத்தில் இறுக்கிச் செருகி அதனை 'ஸ்டேரிங்'காகப் பயன்படுத்தி வாகனத்தை ஓட்டத் தொடங்கினார்.

தெற்கு ஆஸ்திரேலிய பொலிசாரால் கைது செய்யப்பட்ட சாரதிக்கு மறியல்; வாகனத்தை நீதிமன்றம் பறிமுதல் செய்துள்ளது.

## அதிர்ஷ்டம் வருமென்றால் இப்படியும் வரலாம்!

அமெரிக்காவின் ஒறிஹன் மாநிலத்தில் ஸ்பிரிங்பீல்ட் என்றொரு நகரம். இங்குள்ள உணவகமொன்றில் மதுபானச் சேவையாளராக பணியாற்றி வருபவர் கெபார்ட் என்ற இளநங்கை.

இங்கு வரும் நிரந்தர வாடிக்கையாளர் ஒருவர், ஒருநாள் 'ரிப்ஸ்' கொடுப்பதற்கு கையில் பணமில்லாமையால், தம்மிடமிருந்த லொத்தர் டிக்கட் ஒன்றை கெபார்ட்டிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அந்த டிக்கட்டுக்கு 17,500 டாலர் பரிசாகக் கிடைத்துள்ளது. ஆனாலும் அதில் ஒரு சதத்தைக்கூட பெறுவதற்காக அந்த வாடிக்கையாளர் மறுத்துவிட்டதால், கெபார்ட் அதிர்ஷ்டசாலியாகிவிட்டார்.

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - இந்துவின் கலையரசி 2013

கனடாவிலுள்ள யாழ் இந்துக் கல்லூரிச் சங்கத்தின் கலையரசி - 2013 விழா ஒக்ரோபர் மாதம் பன்னிரெண்டாம் நாள் ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தமிழர் பாரம்பரியத்திற்கு ஏற்ப மங்கல விளக்கேற்றல், கல்லூரிக் கீதம், தேசிய கீதம் இசைக்கப்பட்டன.

நாட்டியக்கலைமணி ஸ்ரீமதி மாலினி பரராசசிங்கம் அவர்களின் மாணவிகள் புஸ்பாஞ்சலியுடன் வரவேற்பு நடனத்தை வழங்கினர். ஆடலரசி ஸ்ரீமதி செந்தில்செல்வி சுரேஷ்வரனின் மாணவர்கள் 'Fusion' வடிவிலான நடனத்தை விறுவிறுப்பாகவும் மனதைக்கவரும் வகையிலும் வழங்கினார்கள். "திரை நடமிடும் தேவியர் இருவர்" என்னும் நடன நிகழ்ச்சியினை யாழினி ராஜகுலசிங்கமும் நிவேதா இராமலிங்கமும் இணைந்து வழங்கினார்கள். 'பிருந்தாவனத்தில் ஓர் நாள;' என்னும் நடன நிகழ்ச்சியில் பூங்குழலி இளங்குமரன் அவர்களின் மாணவர்கள் கண்ணனின் குறும்புகளை அழகாக வெளிப்படுத்தினர்.

சங்கத்தலைவர் கதிர். சுப்பிரமணியம் தலைமையுரை வழங்கினார். "யாழ்.இந்துவின் பழைய மாணவர்களாகிய நாம் எமது இந்துக்கல்லூரியின் உயர்வுக்காக எம்மாலான பங்களிப்புகளைச் செய்வது மிகவும் இன்றியமையாதது" என அவர் குறிப்பிட்டார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் "கல்யாணப்பேச்சு" என்னும் நாடகத்தை இளைப்பாறிய இந்துமகளிர் கல்லூரி ஆசிரியர் செல்வி. குழந்தைவேலு அவர்களின் இயக்கத்தில் யாழ். இந்துமகளிர் கல்லூரி பழைய மாணவி தேவகி முனீஸ்வரராசா குழுவினர் வழங்கினர். நெஞ்சு பொறுக்குதில்லையே" என்னும் நாடகம் பொன்னையா விவேகானந்தன் அவர்களால் அரங்காக்கம் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் காலத்துக்கு ஏற்ற கதையைக் கொண்டதாகவும் பங்கு கொண்ட நடிகர்கள் மூவரும் தம் நடிதிறனை சிறப்பாக தம் பாத்திரங்களை உணர்ந்து அதற்கேற்ப வெளிப்படுத்தியதையும் உணரமுடிந்தது.







சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் அவர்கள் தம் குழுவினருடன் "வேந்தனின் சீற்றம்" நாட்டுக்கூத்தினை மேடையேற்றினார். பாரம்பரிய கலையினை கண்டு சபையோர் குதூகலம் அடைந்தனர்.

வேணுகானவாருதி கலாநிதி செல்வநாயகம் தயாபரன் செல்வநாயகம் சண்முகலிங்கம் நிரோசன் சுகுமார் மதுசன் சுகுமார் ஆகியோர் இணைந்து புல்லாங்குழல் இசை நிகழ்ச்சியினை வெகு சிறப்பாக வழங்கினர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு.சி. சிற்றம்பலம் தமதுரையில் யாழ் இந்துக்கல்லூரியில் தான் கற்றகாலத்திலும் கற்பித்தகாலத்திலும் உள்ள நிலைமைகளை பசுமையான நினைவுகளுடன் பகிர்ந்து கொண்டார்.●
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# கூடி எதிர் நின்றார்!

கந்தப் புராணத்திலே முருகப் பெருமானுக்கும் சூரனுக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு யுகங்களில் முடிந்தது. கம்பராமாயணத்தில் இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு மாதங்களிலே முடிந்தது என்று சொல்கிறார்கள். மகாபாரத யுத்தமும் பதினெட்டு நாட்கள் தான் நடந்தது. அது போல ஈழ யுத்தமும் மே பதினெட்டாம் திகதிதான் முடிந்து போனது! பதினெட்டுக்கு அப்படியொரு பெருமை போலும்!

தலைமை அழிந்தது! தளபதிகள் அழிந்தார்கள்! படைகள் அழிந்தன! மக்கள் அழிந்தார்கள்! சிலர் மண்டியிட்டார்கள்! இன்னும் சிலர் காட்டிக் கொடுத்தார்கள்! பலர் கைதானார்கள்! உண்மைதான்! ஆனால் திருக்குறளின் படை மாட்சி என்ற அதிகாரத்து ஐந்தாவது குறளுக்கு ஏற்ப போராடி மறைந்த ஈழ மறவர்களையும் இந்த யுத்தத்தில் உலகம் கண்டுதான் இருக்கிறது!

மன்னார் மடுவிலே தொடங்கிய பின்னடைவு தொடர்ந்து கொண்டு போகிறது! பின்வாங்குகின்றன படைகள் தளபதிகள் கட்டளைப்படி! கிளிநொச்சி வீழ்கிறது! அதனால் படைகளின் ஒழுங்கு சிதைகிறது! விளைவு பரந்தனும் ஆனையிறவும் மணலாறும் கூட கைவிட்டுப் போகின்றன! எங்குமே ஓட முடியாத நந்திக் கடல் கரையிலே எஞ்சிய படைகளும் மிஞ்சிய மக்களும் குவிகிறார்கள்! பிள்ளைகள் வெளிநாட்டிலே மனைவி வெளிநாட்டிலே என்று ஓயாமல் பேசப்பட்ட தலைமையும் வன்னியின் முள்ளி வாய்க்கால் மண்ணிலே குடும்பத்தோடு ஒதுங்குகிறது மக்களை விட்டுப் போகாமல்! போக மனம் இல்லாமல்!

இராணுவம் நான்கு புறமும் மூன்று வகைப் படையோடும் சூழ்ந்து கொண்டு தாக்க எத்தனிக்கிறது! புலம் பெயர் சமூகமும் உலகம் முழுவதும் போராடிக் களைத்துவிட்டது எதுவுமே செய்ய முடியாமல்! நட்பும் பகையும் நடுநிலைமையும் என்றிருந்த உலகம் பகை என்ற ஒரு கொடிக்கு கீழே ஒடுங்கி விடுகிறது காரணம் இல்லாமல்! தென்னகத்து வேடதாரிகள் தீர்வு தெரிந்தும் தீண்டி விடுகிறார்கள் குழப்பத் திரியை!

தோல்வி நிச்சயம் என்று தெரிகிறது! மக்கள் மடியப் போகிறார்கள் என்றும் தெரிகிறது! நாமும் அழியும் நேரம் வந்து விட்டது என்று படைகள் உணர்கின்றன. மறுகணமே அந்த வீரர்கள் ஆயதங்களை எடுத்துக் கொண்டு எழுகின்றார்கள்! தாக்கத் தொடங்குகிறார்கள்! இதைச் சற்றும் எதிர்பாராத எதிரியின் கண்கள் அகல விரிகின்றன ஆச்சரியத்தால்! தப்ப முடியாது என்று தெரிந்தும் தாக்குகிறார்கள் என்று தகவல் கொடுக்கிறார் தலைமைத் தளபதி! பயத்தோடு!

வெட்கத்தால் முகம் சிவக்கின்றன வீழ்த்த நினைத்த நாடுகள்! வெம்பு வெம் சேனையோடும் வேறுள கிளைஞரோடும் தம்பியை இழந்து கிடப்பனோ தமையன் மண்மேல்? என்று கேட்பாரே கம்பர்! ஆம்! தலைமைக்கு முன்னே தம்மை மாய்த்துக் கொள்கிறார்கள் அந்த வீரர்கள்! எங்கள் தலைவன் தனி மனிதனாக வீழக் கூடாது என்ற ஒன்றுக்காக தாங்களும் பிணமாகின்றார்கள் பக்கத்தில்!

எதிரி பீரங்கிகளால் சுட்டும் வானத்திலிருந்து குண்டுமழை பொழிந்தும் கூட சிறு சிறு குழுக்களாக் கூடித் தாக்கிவிட்டு வீழ்ந்து மடிகிறார்கள் அந்த வேங்கைகள்! அவர்கள் புறமுதுகிட்டு ஓடவில்லை! கவச வாகனங்களை வெறும் நிலத்தில் நின்று தாக்குகிறார்கள்! தாக்கியபடியே செத்தும் போகிறார்கள் அந்த வீரர்கள்! வீராங்கனைகள்!

வெட்கத்தை விட்டு வெளிப்படையாகவே சொன்னது இராணுவம் இறுதி நாளில் ஆயிரக்கணக்கில் படையினரை இழந்தோம் என்று மிரட்சி மாறாமல்!

வள்ளுவர் சொன்னார்! கூற்றுவன் எனப்படும் இயமனே கோபங்கொண்டு எதிரே வந்தாலும் அஞ்சாமல் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதே படையாகும் என்றார் அவர்.

கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்

ஆற்றல் அதுவே படை

கூற்று உடன்று - இயமனே கோபம் கொண்டு: மேல்வரினும் - தங்களுடன் போருக்கு வந்தாலும்: கூடி எதிர் நிக்கும் - உயிருக்குப் பயந்து பின்வாங்காமல் தம்முள் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும்: ஆற்றல் அதுவே படை - ஆற்றலை உடையதே படையாகும்!

இயமனே கோபம் கொண்டு தங்களுடன் போருக்கு வந்தாலும் உயிருக்குப் பயந்து பின்வாங்காமல் தம்முள் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடையதே படையாகும்!

திருக்குறளின் படை இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வாழ்ந்து விட்டுப் போய்விட்டார்கள் ஈழ மண்ணை விட்டு! மானத்தோடும் தான்! மாசும் இல்லாமலும் தான்!

காதலர் வரவில்லைத் தோழி

களத்திலே இருக்கட்டும் இங்கென்ன வேலை?

மோதட்டும் பகைவர்கள் முன்னால் தோழி

முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்!

மாதர்கள் வீரமே பெரிதாம் அவர்

மாண்டாலும் மாழட்டும் போரிலே என்று

காதலால் இசைபாடு தோழி! கொண்ட

கடமையை மறவாத தமிழீழம் வாழி! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 8

சென்ற மாதம் முகப்புத்தகம் பரபரப்பாக கலகலப்பாக இருந்தது. வட மாகாண சபைத் தேர்தல் முடிந்து 'முடிசூடிய' முதலமைச்சரின் கையில் 'வேலை'க் கொடுத்திருந்தார்கள். முதல் வேலையாக அவர் சத்தியப்பிரமாணம் செய்ய... அது குறித்த பேஸ்புக் கருத்துக்கள் ருசிகரமாக இருந்தன. ஒரு நண்பர் 'ராஜபக்சவின் முன்றலில் பதவிப்பிரமாணம் செய்வது ஒன்றும் பெரிய அதிருப்திக்குரிய செயல் அல்ல... போரில் தோற்ற எமது நிலத்தை ஆட்சி செய்யும் மன்னன் ராஜபக்சவுக்கான தூதனையே இம்முறை தெரிவு செய்தோம்" என எழுதியிருந்ததற்கு நான் 'ராஜபக்சேக்கான தூதன் என்பது மிக மிகச் சரியாகப் பொருந்துகிறது.. இந்தத் தூதனுக்கு சிங்களம் வேறு தெரிந்திருக்கிறது. சைவ அடையா-ளங்களுடன் தன்னை அலங்கரித்திருக்கும் தமிழ்த் தூதன் இவர்... மற்றப்படி நாம் சொல்லவந்த சேதியை தூதன் சொல்லுவானா என்பது இன்னும் தெரியாது." என்று பதில் போட்டிருந்தேன்.

அந்நேரத்தில்தான் வடக்கு முதலமைச்சரும் தன் மும்மொழித் திறனுக்கு எடுத்துக்காட்டாக சிங்களத்தில் பேசி சிங்களத் தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டி கொடுத்திருந்தார். அந்தப் பேட்டி முகப்புத்தகத்தில் பகிரப்பட்டபோது அதற்கு நான் 'நாம் மொழிகளுக்கு எதிரி அல்ல. ஆனால் வடமாகாண முதலமைச்சர் சிங்களத்தில் சரளமாகப் பேசி மாஸ்மீடியாவுக்கு பேட்டியளிப்பது ஒரு பெருந் தவறாகும். அதைப் பார்ப்பவர்கள் இனிமேல் அனைத்துத் தமிழர்களுக்கும் சிங்கள மொழி தெரிந்திருக்கவேண்டும் என்ற ரீதியில் சிந்திக்க ஆரம்பிப்பார்கள். பிறகென்ன... முதலமைச்சருக்கே சிங்களம் தெரியும் ஆகவே நீங்களும் சிங்களம் படியுங்கள் என்பார்கள். இதன்மூலம் இலங்கையின் மொழிப்பிரச்சனைக்கு பெரும்பான்மை மொழியை சிறுபான்மையினர் தெரிந்து கொள்வதுதான் தீர்வு என்பது உறுதிப்படுத்தப்பட ஆரம்பிக்கப்படும்" என்று என் அதிருப்தியை பகிர்ந்திருந்தேன். ஏதோ நம்மாலான எதிர்க்குரல்.

இந்த எதிர்க்குரலாற்றும் முகப்புத்தகக் களேபரங்களில் கனடாவில் நடக்கும் நிகழ்வுகளும் அவ்வப்போது பங்குபற்றும். ஒக்டோபர் 13ந்தேதி மார்க்கம் தியேட்டரில் 'மனவெளி' கலையாற்றுக் குழு வழங்கிய பதினாறாவது 'அரங்காடல்' நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். 'இத்தனை சிறந்த ஈழத்தமிழ் நடிகர்கள் கனடாவில் இருக்கிறார்களா" என்ற பிரமிப்பை என் மனதில் பலமாக ஏற்படுத்திய நிகழ்ச்சி அது. நிகழ்ச்சி முடிந்தவுடனேயே அதில் நடந்த நாடகங்கள் பற்றிய விமர்சனங்களும் முகப்புத்தகத்தில் பரபரப்பாயின. நாடகம் குறித்த, நாடகப் பிரதிகள் குறித்த, நெறியாள்கை குறித்த ஆரோக்கியமான விவாதங்கள் அவை. உற்சாகத்துடன் பங்கு கொண்டேன். 'கனடாவில் திறமையும் ஆர்வமும் கொண்ட தமிழ்க் கலைஞர்களுக்கு மேடைகள் போதாது என்பது என் வெகுநாளைய அவதானம். அத்தகைய கலைஞர்களை ஒருங்கிணைக்கும் அமைப்புக்களின் எண்ணிக்கை போதாது என்பது என் மறு அவதானம். கனடா தமிழர்களின் நடிப்புலக வளர்ச்சிக்கு உள்ளூர்த் தொலைக்காட்-சிகள் அதிகம் செய்யவேண்டும் - ஆனால் கனடாத் தமிழ்த் தொலைக்காட்சிகளுக்கு அந்தப் பேரவா இல்லை என்பதும் என் இன்னொரு அவதானம். இவ் அவதானங்கள் தரும் ஆதங்கத்திற்கு மருந்தாக 'மனவெளி' கலையாற்றுக் குழு தன் வரலாற்றுக் கலைக் கடமையை செய்து வருகிறது" என்று என் முகப்புத்தகத்தில் சிலாகித்திருந்தேன்.

கனடா தொலைக்காட்சிகளைக் குறித்து எழுதிய நேரமோ என்னவோ யாழ்ப்பாணத்துத் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சி குறித்து நான் எழுதியதும் ஒரு முகப்புத்தக விவாதக் கருத்துப் பரிமாற்றமாயிற்று. மணியம் தோட்டத்தில் மீளக் குடியேற வந்த சிங்கள இன மக்களில் ஒருபகுதியினர் நாவற்குழியிலுள்ள அரசாங்கக் காணியில் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடன் சிறீதரன் எம்பி. வாக்குவாதப்பட்ட வீடியோ ஒன்று முகப்புத்தகத்தில் பகிரப்பட்டு காரசாரமான கருத்துப் பரிமாற்றத்திற்கு உள்ளானது. 'அத்தனை சிங்கள மக்களும் 83ற்கு முன்பே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களும், அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களுமாக இருக்கும்போது சிறீதரனின் நடவடிக்கை அராஜகமாகப்படுவதுபோல் உள்ளது." என ஒருவரும் அதுபோல பலரும் அது குறித்துக் கருத்துத் தெரிவித்தனர்.

சிறீதரனின் செயலை மட்டம் தட்டும் நோக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்று அது குறித்து ஒரு செய்திக் கண்ணோட்டத்தை ஒளிபரப்பியது. அந்நிகழ்ச்சியும் முகப்புத்தகத்தில் வெளிபரப்பானது. ஏனோ அந்நிகழ்ச்சி ஒரு பக்கச்சார்பானதாக எனக்குப்பட 'சிறீதரன் செய்தது சரியா பிழையா? என்பதைவிட அங்கிருப்பவர்கள் அப்பாவிகள் ஏழைகள், தமிழ்பேசும் சிங்கள இனத்தவர்கள் என்பதையும் விட இந்த குடியேற்றங்களின் பின்னால் இருக்கும் அரசாங்கத்தின் நுண்அரசியலானது சிறுபான்மை இனத்திற்கு பாதகமானது என்பதை மறுக்க முடியாது." என ஒரு பதிவைப் போட்டேன். 'தமிழ் மக்களுக்கென்றொரு பாரம்பரியப் பிரதேசம் இருப்பதை காலப்போக்கில் இல்லாமல் செய்து - ஒரு காலத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை திகாமடுல்ல ஆகியதுபோல் - யாழ்ப்பாணத்தையும் காலப்போக்கில் 'யாப்பணய" ஆக்குவதுதான் மகிந்த சகோதரர்களின் தொலைநோக்குச் சிந்தனையாகத் தெரிகின்றது. விதைக்கப்படும் இவ்வகையான குடியேற்றங்கள் தமிழர்கள் குடியிருப்புக்களின் தொடர்ச்சியைச் சிதைத்துவிடும்." என ரொறன்ரோவின் ஒரு இலக்கிய நண்பர் தன் ஆதங்கத்தை பதிலா-கத் தெரிவித்தார். 'யாரும் எங்கும் குடியேறலாமென்றால் சிங்களப் பகுதியில் உள்ள அரசாங்கக் காணிகளில் முஸ்லிம்களை குடியேற வைத்து பாகுபாடற்ற ஒன்றுபட்ட இலங்கையை மகிந்தாஸ் உருவாக்குவார்களா...?" என்று நான் ஆதங்கப்பட அதை வழிமொழிவதுபோல 'போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களது சொந்த நிலத்துக்குத் திரும்பமுடியாத நிலையிலிருக்கும்போது இவ்வகையான திட்டமிட்ட குடியேற்றங்கள் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்றது." என வேறொருவர் வேதனைப்பட்டார். 'இலங்கை இனத்துவ மத மொழி பாகுபாடு இல்லாத நாடு என்று நாட்டு சாசனத்தில் மாற்றி விட்டு அரசு வரட்டுக்கும் - தமிழர்கள் தமது நிலத்தையே பிறருக்கு கொடுப்பார்." என்றார் மற்றொருவர். 'இதிலிருந்து தப்பவோ மீளவோ சர்வதேச சட்டங்களையும் நடைமுறைகளையும் நாடலாமே தவிர இன்னும் பழைய யாழ் மேலாதிக்க எண்ணத்துடன் அதை அணுக முடியாது." என ஒருவர் கடிந்தார். இன்னொரு கருத்து 'சிறீதரன் ஒரு முட்டாள் அவனது கோபம் வெறும் மலிவான அரசியல் நாடகம்." என்றது. வேறொரு கருத்து: 'யுத்தம் இடம்பெற்ற காலத்தின் போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களில் தான் குடியேறினார்கள்" என்றது. இப்படியாக பற்பல கருத்துக்கள்...

ஆக இவ்விவாதத்தில் உளமார நான் இட்ட கருத்துக்களில் மூன்று கீழே: (1) 'தமிழ் ஈழம் என்ற ஈழத்தமிழரின் ஆத்மார்த்தமான கோரிக்கை இன்று வலுவிழந்து போய்க் கொண்டிருக்கிறது' (2) 'எனக்கென்னவோ சிறீதரன் கோபத்தில் ஒரு தர்ம நியாயம் தெரிகிறது' (3) 'ஒரு பேச்சுக்காகக் கேட்கிறேன்... சிறீதரன் செய்யாமல் மாறாக இன நல்லிணக்கத்திற்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா அதையே செய்திருந்தால் நாம் என்ன சொல்லியிருப்போம்???' ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கம்பியுடெக்' கல்லூரியின் பட்டமளிப்பு வைபவம்

றொறன்ரோ-ஸ்காபரோ- மார்க்கம் ஆகிய இடங்களில் வளாகங்களை அமைத்து, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்ற 'கம்பியுடெக்' கல்லூரியின் 2012-2013ம் ஆண்டுக்கான பட்டமளிப்பு வைபவம் கடந்த மாதம் 27ம் திகதி ஸ்காபரோ டெல்ரா ஹோட்டலில் இடம்பெற்றது. கல்லூரின் அதிபர் கலாநிதி த. வசந்தகுமாரின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய ஒன்ராறியோ மாகாண நுகர்வாளர் சேவை அமைச்சர் ரேசி மக்சார்ள்ஸ், மற்றும் ஸ்காபரோ எஜின்கோர்ட் மாகாண சபை உறுப்பினர் சூ வொங் ஆகியோரின் உரைகளையடுத்து பட்டமளிப்பு சிறப்பாக நடை-பெற்றது. கம்பியுடெக் கல்லூரியில் இதுவரை இரண்டாயிரம் பேர்வரை பட்டம் பெற்று தொழிலும் பெற்றுள்ளனர் என்ற தகவல் இவ்வைபவத்தில் தெரிவிக்கப்பட்டது.●
























# திருமாவளவனின் 'முதுவேனில் பதிகம்' வெளியீடு









கவிஞர் திருமாவளவனின் 'முதுவேனில் பதிகம்' கவிதை நூல் வெளியீட்டு வைபவம் கடந்த மாதம் ஸ்காபரோ சிவிக் சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் க. நவம் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் செல்வா, கனகநாயகம் இந்நூலிலுள்ள கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் தரம் பெற்றவை என்று கூறினார். விமர்சன உரை நிகழ்த்திய கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், 'கனடாவின் வளங்களைப் பயன்படுத்தும் எம்மவர்கள் இனி துயர்பகிர் படைப்புகளிலிருந்து மாறவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நூலாசிரியரின் நன்றியுரையை அடுத்து, அவரது பிறந்தகமான மாரீசங்கூடலில் முதலாவது நூலகத்தை அமைப்பதில் முன்னின்று உழைத்த சிவம் என்ற அன்பருக்கு நூலின் முதற்பிரதி கையளிக்கப்பட்டது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உயரிய பண்பை கனடாவில் எடுத்துக்காட்டிய ஒட்டாவா நாடாளுமன்றம் முன்னாலான நன்றிக்கூடல்



(ஒளிப்படங்கள்: செய்தி. கொம் - குணா)

இலங்கையில் இந்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாது அதனைப் புறக்கணிக்கும் கனடியப் பிரதமருக்கும், கனடிய வெளிவிவகார அமைச்சருக்கும் மற்றும் இவ்விடயத்தில் தமிழரின் உணர்வுகளைப் புரிந்து செயற்படும் கனடிய அரசியற் கட்சிகள், கனடிய ஊடகங்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையிலான கனடியத் தமிழர் சமூகத்தின் நன்றிக்கூடலொன்று கடந்த 28ஆம் திகதி ஒட்டாவா நாடாளுமன்ற முன்றலில் இடம்பெற்றது. ரொறன்ரோ, மொன்றியல், ஒட்டாவா நகரங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமானோர் கனடியக் கொடிகளைத் தாங்கியவாறு இங்கு திரண்டு நின்றனர். நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான நன்றிக்கூடல், பிற்பகல் நான்கு மணிவரை மிக நேர்த்தியாக இடம்பெற்றது. மூன்று பிரதான அரசியற் கட்சிகளையும் சேர்ந்த முப்பது வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்குபற்றி தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். முதலாவது உரையை கனடிய நீதி அமைச்சர் பீட்டர் மக்கே 'கனடியத் தமிழரின் நன்றிக்கு, ஹாப்பர் அரசின் நன்றி' என்று கூறி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.●








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மதிப்புப்பெற்ற எழுத்தாளர்

## ஐம்பத்தைந்து ஆண்டு எழுத்துலக பூர்த்தியை முன்

சர்வதேச மதிப்புப்பெற்ற எழுத்தாளர் திரு. அப்பாத்துரை முத்துலிங்கம் அவர்களுடனான ஓர் 'இலக்கியச் சந்திப்பு' நிகழ்வு அக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை கனடாவிலுள்ள ஸ்காபரோவில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. அவரது எழுத்துலக ஐம்பத்தியைந்து ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு கனடா 'தமிழர் தகவல்' வெளியீட்டகம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு செந்தாமரை கலையகத்தில் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றது. எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், வணிகப்பிரமுகர்கள் என்று பல்துறை சார்ந்தவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். பெருமளவிலான மகளிர் இந்நிகழ்வில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. சிறப்புரைகள், பாராட்டுரைகள் என்றில்லாது கலந்துகொண்டவர்கள் முத்துலிங்கம் அவர்களது எழுத்துகளை விமர்சித்ததாகவும், எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு திரு.முத்துலிங்கம் அவ்வப் போது பதிலளித்ததாகவும் ஒரு கலந்துரையாடலாக மிகவும் ஆரோக்கியமாக இந்த



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாத்துரை முத்துலிங்கம் அவர்களின்
## ...ன்னிட்ட இலக்கியச் சந்திப்பு - 'முத்துமாலைப் பொழுது'






நிகழ்வு அமைந்திருந்தது. ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளில் வரும் சில வாக்கியங்களை இந்தியத் தமிழ் நடைக்கு மாற்றி வெளியிட்ட காலம் மாறி, ஈழத்துத் தமிழ் நடையில் அப்படியே பிரசுரிக்கும் நிலை தமிழக சஞ்சிகைகளில் இன்று ஏற்பட்டுள்ளது என்று திரு. முத்துலிங்கம் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் நிகழ்வை ஆரம்பித்து வைத்து நேர்த்தியாக நெறிப்படுத்தினார். தமிழகத்தில் மிகவும் புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கும் திரு. முத்துலிங்கம் அவர்களின் படைப்புகளை அங்குள்ள வெளியீடுகள் விரும்பிப் பிரசுரிப்பதாகவும, இதுவரை அவரது ஆக்கங்கள் 18 நூல்களாக அங்கு வெளியிடப்பட்டுள்ளதாகவும், இவைகள் அவருக்கு 7 சிறப்புப் பரிசுகளையும் 4 விருதுகளையும் பெற்றுக் கொடுத்திருப்பதாகவும் நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது. 55 ஆண்டுகால இலக்கியப் பணியை வியந்து நினைவுப் பரிசுகள் இங்கு வழங்கப்பட்டது.●

ஒளிப்படங்கள்: செய்தி.கொம் - குணா

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிசிசாகாவில் புதிய இடத்தில் 'தாமோர்' நிறுவனம்





மிசிசாகா டிக்சி வீதி 107ம் இலக்கத்தில் புதிய இடத்தில் புதிய பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள 'தாமோர்' நிறுவனம், கடந்த மாதம் 22ம் திகதி காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. வர்த்தக முன்னோடி திரு. சிவம் அவர்களின் முன்னெடுப்பில் அவரது மனைவி மற்றும் மூன்று புதல்வர்களால் இணைந்து நடத்தப்படும் இந்நிறுவனம் தங்கநகை விற்பனையுடன், எம்மவர் மத்தியில் 'ஆன்லைனில்' துரித பணமாற்றுச் சேவையையும் அறிமுகம் செய்த சாதனைக்குரியது. மிசிசாகா மேயர் ஹேசெல் மக்கலன் நாடாவை வெட்டி மங்கல விளக்கேற்றி வாழ்த்துக் கூறி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். பல்வேறு ஊடகங்களும் பெருமளவில் பங்குபற்றி வைபவத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.


Brimley Road Medical Centre

WALK-IN CLINIC & FAMILY PRACTICE

* புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்

* ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை

| | | |
|---|---|---|
| Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP | திங்கள் - வியாழன் | 9:00 - 7:00 |
| Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP | வெள்ளி | 9:00 - 5:00 |
| Dr. நஸ்ரத் கான், MD,CCFP | சனி & ஞாயிறு | 9:00 - 1:00 |

* ஆய்வு கூடச் சேவையும் (Life Lab), மருந்தகச் சேவையும் (IDA Pharmacy) இங்கு கிடைக்கும்

(416) 412 3333

3333 Brimley Road
Scarborough, ON M1V 2J7
(Between Steeles & McNicoll)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# சொன்னால் விரோதம்; என்றாலும் சொல்கிறேன்

சொல்வதென்றால் வெட்கமடி தோழி - சொல்லச்
சொல்லுகின்றாய் - என்துணைவன் சொன்ன
செய்ததையும் - பாரதிதாசன்

காலமும் மாறிப் போனதினாற் கருத்துகளும் மாறிப் போயின. வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுகளை ஆழமாகச் சிந்தியுங்கள். சொல்லாமற் செய்வர் பெரியர். சொல்லியும் செய்யார் கயவர். பழக்கவழக்கங்களே அடிதலை மாறிப்போயின. பீடி குடிக்கப் பழகி, அஃது வழக்கமாகிக் கஞ்சா குடிப்பதாய் மாறிப் போயின. ஆகவே துவக்கத்திலேயே களைந்துவிடல் மேலானது. இது அபின், கஞ்சா, சூக்காவாக மாறி மாற்ற முடியாமற் போனமை இன்றைய மாற்றம். எனவே முளையிலேயே கிள்ளி விடுவோம்.

சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லியவணம் செயல். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது அன்றோ. அவ்வைத்தாய் பல பழக்கவழக்கங்களைத் தன் நாதி நூல்களிலே எழுதியுள்ளார். ஆத்திசூடியில் இருந்து அவ்வை குறள்வரை இவை இருக்கச் சினிமாப் பாடல்கள் நாவிலே தவழ்கின்றன. கெட்டுப் போனது நம் தமிழினம். கெடுவது இலகு, திருந்துவதும் திருத்துவதும் கஷ்டம். பெற்றோரையே பிள்ளைகள் வெருட்டி விடுகின்றனர். இதனாற்றான் முன்னோர் கட்டுரை வரைந்தோம் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நாலடியாரைப் படிப்பது பற்றி. புது மொழிகள் சமூகத்தை அழிக்கும் நஞ்சு அன்றோ? பழைய காலத்திலே பெற்றோர் தொட்டு மன்னன்வரை பிள்ளைகளைக் கட்டி வளர்ப்பதில் அக்கறையாய் இருந்தனர். சூதாடல், கஞ்சா புகைத்தல் நன்றா, தீதா சிந்தியுங்கள்.

மிகப் பழமையான காலத்திலே போக்குவரத்துக்கு வண்டி வாகன வசதியில்லை. எனவே, மாடு, குதிரை, யானை போன்றவற்றைப் பழக்கிப் போக்குவரத்துச் செய்தனர். இதை மையமாக வைத்துப் பல பழமொழிகள் உருவாயின. ஒன்று வருமாறு: ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்.

மாட்டைப் பழக்கி அதன்மேல் ஏறி நொண்டிகள் பயணஞ் செய்வர். ஆக, மாட்டுக்குப் பிடியாமை வரும் கட்டமொன்று வரும்.

கழுதை சுமைகளை நெடுந்தூரம் எடுத்துச் செல்லும். இவ்வண்ணமே, முடவனும் எருதும் எருத்து மாட்டிற் பயணம் செய்யும் வழக்கம் வந்தது. எனவே எருத்து களைத்து முடவன் ஏறிச் செல்வதை விரும்பாது. அவ்வண்ணமே நொண்டியும் பயணித்து அலுத்துப்போம். எனவே நொண்டியையும், எருத்து மாட்டையும் வைத்து இப்பழமொழி வந்தது.

ஏகாலிகள் கழுதையிலே தோய்க்கும் துணிகளை ஏற்றிச் செல்வர். உப்புச் சுமந்த கழுதைபோல என்றோர் பழமொழியுண்டு. எனவே கசப்பான கருத்துகளை வைத்து எழுதிய பழமொழிகள் பல அனுபவபூர்வமாய் எழுந்தன.

பண்டைக் காலத்திலே யானை, குதிரை என்பனவற்றைப் பழக்கிப் பயணித்தனர். இவற்றை மையமாக வைத்துப் பல கருத்துகள் நடைமுறையில் உண்டு.

ஆசிரியர்களின் கற்கை நெறியிலே கட்டுப்பாடும், கட்டாயம், கண்டிப்பு, தண்டிப்பு நிறைய உண்டு. வேப்பெண்ணெய் போலக் கசப்பாய் இருப்பதும் உண்டு. கற்க கசடற என்பது குறள்வாக்கு. எனவே ஆசிரியரிலே வெறுப்பும் வரும். வீட்டுப் பாடங்கள் இவற்றிற்குப் புறம்பன்று. எனவே ஆசிரியர் தன்னலங் கருதியா கண்டிக்கின்றனர்.

கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புக்காயினும் கற்கை நன்றேயென்றார் பிராட்டி. பெற்றார்கள் எவ்வளவு சிரமப்பட்டுக் கல்லூரிக்கு அனுப்புகின்றனர். எனவே இதிற் கள்ளத்தனம் செய்தல் ஆகாது. ஆசிரியர்களை வெறுக்காதீர்கள். படித்துப் பட்டம் பெறுங்கள் டாக்டராக, எஞ்சினியராக, கணக்காளராக நண்பர்கள் படித்து - சகபாடிகள் முன்னேற நீங்கள் வாழா இருப்பதா? இதற்காக ஆசிரியர்களை வெறுக்காதீர்கள். பல்கலைக்கழகம் சென்று உயர் படிப்பை மேற்கொண்டு உயர் கல்விமான்கள் ஆகுங்கள். நாமெல்லாம் நல்லவர்களாய் வாழ்வோமாக.

இவ்வண்ணமே வீடுகளிலும், மனைகளிலும் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வோடு வாழ்க்கை மேற்கொள்ளல் குடும்ப மேம்பாட்டிற்குப் பல்லாற்றானும் உதவியாய் இருப்பதும் குடும்பம் மேற்கொள்வது வருங்காலச் சந்ததிக்கு உதவுவதாகும்.

ஆண்கள் குடும்ப நலனைப் பேணுவதில் முன்னோடிகளாய் இருப்பது மேலானதாம். தாம்பத்திய வாழ்வின் வழிகாட்டிகள் நீங்களன்றோ. ஆக வேண்டா வெறுப்புகளை விடுத்து அன்பின் வழி செல்வீர்களாக. மதுவஸ்துகளை விடுங்கள். சூதாடாதீர்கள். சிக்கனம் மேற்கொள்ளுங்கள்.
இவ்வண்ணமே நண்பர்களும் வாழ்வை மேற்கொளல் நன்று. ஒருவர் பொறை இருவர் நட்பாகும். வீண் குடும்பச் சண்டைகளை விடுவோம். உங்கள் கிராமங்கள் மாதிரிக் கிராமங்களாகட்டும். தக்க தலைமுறையை மேலோங்க முயலுங்கள்.

வேண்டாவெறுப்புகளை விடுத்து ஒற்றுமையாய் வாழுங்கள். அன்புதான் நம்கைச்சாவி. அரசியல் விவகாரங்களை விடுத்து உத்தம சந்ததிகளை வடிவமைப்போம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB





## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 71

## என்றுமுள்ள செந்தமிழ் வைணவத்தில் தமிழ் முன் செல்ல பெருமாள் பின் தொடருகிறார்!

ஆழ்வார்களின் பக்தி இயக்கத்தின் முக்கியக் கூறு தாய் மொழியில் இறைவனை வழிபடுதலாகும். இதை "விதையாக நற்றமிழை வித்தியென் உள்ளத்தை நீ விளைவித்தாய் கற்ற மொழியாகிக் கலந்து" என்ற திருமழிசை ஆழ்வாரின் இனிய பாசுரத்தால் அறியலாம். மெய்யியல் ஞானம் உயர் குலச் சொத்தாக இருந்ததை மாற்றி உயர் வேதத்தை தமிழ் செய்து தமிழ் மறையை எக்குலத்தோர்க்கும் சமம் என்று வைத்தனர் வைணவர்கள். இதையே புரட்சிக் கவி பாரதிதாசன், "முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில் இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய் இராமானுசனை ஈன்றதன்றோ?" என்கிறார்.

ஆழ்வார்கள் ஆக்கி வைத்த ஆதி தமிழ் மறுமலர்ச்சியால் இன்றளவும் வைணவத் திருக்கோவில்களில் தமிழ் பாசுரங்களால்தான் தினமும் ஆண்டவனுக்கு அர்ச்சனை ஆகிறது. தமிழ் முன் செல்ல பெருமாள் பின் தொடர அதன் பின் ஆரிய வேதத்தை வைத்த பெருமை தமிழகத்தில் வைணவத்திற்கே சாரும்.
பன்னிரு ஆழ்வார்கள், தேவார மூவர் மற்றும் மாணிக்கவாசகர் போல் திருமாலின் அழகையும் திருக்குணங்களையும் தித்திக்கும் தமிழ்ப் பாடல்களிலே வடித்துக் கொடுத்துள்ளார்கள்.

இத்திவ்வியப் பிரபந்தத்தைத் திராவிட வேதம் என்றும் தமிழ் வேதம் என்றும் கொண்டாடப்படுகிறது. இவர்களால் பாடப் பெற்ற புண்ணிய தலங்கள் மொத்தம் நூற்றெட்டாகும். இந்த நூற்றெட்டு திவ்விய தேசங்களின் பெருமைகளையும், ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுடைய வைபவங்களையும் இந்நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தால் அறியலாம்.

இத்தகைய திவ்வியப் பிரபந்தம் ஆழ்வார்களுடைய காலத்துக்குப் பின்னே வழக்கிலிருந்தாலும் இடைக்காலத்தில் வழக்காறற்று மறைந்துபோயிற்று. பின்பு, நாதமுனிகள் என்னும் ஆசாரியார் (இவர் வீரநாராயணபுரம் என்னும் காட்டுமன்னார்கோவில் திவ்யதேசத்தில் அவதரித்தவர்) ஒரு சமயம் திருக்குடந்தை என்னும் கும்பகோணத்திற்குச் சென்று பெருமாளை தொழுத பொழுது, அங்கு மேல் திசையினின்றும் வந்திருந்த ஸ்ரீவை'ணவர் சிலர் 'ஆராவமுதே அடியேனுடலம்'என்னும் திருவாய்மொழியை நல்ல இசையோடு பாடக் கேட்டுப் பரவசமானார். மேலும் அவர்கள் 'குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்'என்று பாடி முடிப்பதைக் கேட்ட நாதமுனிகள், அவர்களை அணுகி, உங்களுக்கு ஓராயிரமும் தெரியுமோ என்று கேட்க, அவர்கள் நாங்கள் அறியோம்- ஆயினும் நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்றால் பெறலாம் என்று விடையிறுத்தனர்.

உடனே நாதமுனிகளும் திருக்குருகூரை அடைந்து அங்குள்ள பெரியவர்களின் சொற்படி, ஸ்ரீ மதுரகவிகளியற்றிய 'கண்ணி நுண்சிறுத்தாம்பு'என்னும் திவ்வியப் பிரபந்தத்தைப் பன்னீராயிரம் தடவை பாராயணம் பண்ணி பக்தியோடு நின்றவளவில், நம்மாழ்வார் இவர் முன் தோன்றி தாமியற்றிய திருவாய்மொழியையும் மற்றைய ஆழ்வார்களின் பாடல்களாகிய மூவாயிரத்தையும் இவருக்கு உபதேசம் செய்தார். இவரது காலம் 11 ஆம் நூற்றாண்டு ஆகும். இவ்வாறு நாதமுனிகள் நாலாயிரம் பெற்ற விதத்தைப் பற்றி குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

நாலாயிரம் என்பது பாசுரங்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். 'திவ்வியம்' என்பது அடியவர்களுக்கு இன்பம் அளிப்பது என்ற பொருளில் இனிமை என்னும் பொருளைத் தரும். 'பிரபந்தம்' என்பது 'தொகுப்பு' என்றும் 'தனி நூல்' என்றும் பொருள் தரும் என்பர். எனவே, திவ்விய பிரபந்தம் என்பது, தெய்வத்தின் திவ்விய குணங்களைப் போற்றும் பிரபந்தங்களின் தொகுப்பு என்று பொருள் தரும். நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய ஆழ்வார்கள் 12 பேர் என்பர்.

அவர்களில் பெண் என்பதால் ஆண்டாளையும், நம்மாழ்வாரைப் பாடினார் என்பதால் மதுரகவி ஆழ்வாரையும் விடுத்து ஆழ்வார்கள் 10 பேர் எனக் காட்டுவாரும் உண்டு.
பன்னிரு ஆழ்வார்கள் 6 முதல் 9 நூற்றாண்டுக் கால அளவில் வாழ்ந்தவர்கள்.
1. பொய்கையாழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார் - ஆறாம் நூற்றாண்டு
4. திருப்பாணாழ்வார், 5. திருமழிசையாழ்வார், 6. தொண்டரடிப் பொடியாழ்வார் - ஏழாம் நூற்றாண்டு
7. குலசேகராழ்வார், 8. பெரியாழ்வார், 9. ஆண்டாள், 10. திருமங்கையாழ்வார் - எட்டாம் நூற்றாண்டு -
11. நம்மாழ்வார், 12. மதுரகவியாழ்வார் - ஒன்பதாம் நூற்றாண்டு.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆழ்வார்களின் வரிசை பதிப்புக்குப் பதிப்பு மாறுபடுகின்றன.
பெரும்பாலான பாடல்கள் 108 திவ்ய தேசங்களில் பாடப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பில், அண்ணளவாக 1100 பாடல்கள் நம்மாழ்வாரால் இயற்றப்பட்டதாகும். இப்பாசுரங்களின் மொத்த எண்ணிக்கை 3892 ஆகும். இராமானுசர் காலத்தில் வாழ்ந்த திருவரங்கத்து அமுதனார் இயற்றிய இராமானுசர் நூற்றந்தாதியையும் (108 பாசுரங்கள் கொண்டது) சேர்த்து நாலாயிரம் என்பர். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய திவ்விய பிரபந்தங்கள் 24 வகைப்படும். இவற்றுள் பெரும்பாலானவை பண்ணுடன் பாடக்கூடிய இசைப்பாடல்களாகும்.

முதலாயிரம்
பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு 12, திருமொழி 461,
ஆண்டாள் - திருப்பாவை 30, நாச்சியார் திருமொழி 143,
குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி 105),
திருமழிசையாழ்வார் - திருச்சந்தவிருத்தம் 120,
தொண்டரடிப்பொடியாழ்வார் - திருமாலை 45, திருப்பள்ளி எழுச்சி 10,
திருப்பாணாழ்வார் - மலனாதிபிரான் 10,
மதுரகவியாழ்வார் - கண்ணிநுண்சிறுத்தாம்பு 11.
இரண்டாவதாயிரம்
திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி 1084, திருக்குறுந்தாண்டகம் 20, திருநெடுந்தாண்டகம் 30.
மூன்றாவதாயிரம்
பொய்கை ஆழ்வார் - முதல் திருவந்தாதி 100,
பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி 100,
பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி 100,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமழிசை ஆழ்வார் - நான்முகன் திருவந்தாதி 96,
நம்மாழ்வார் - திருவிருத்தம் 100, திருவாசிரியம் 7, பெரிய திருவந்தாதி 87,
திருமங்கை ஆழ்வார் - திருஎழுகூற்றிருக்கை 1, சிறிய திருமடல் 40, பெரிய திருமடல் 78,
திருவரங்கத்தமுதனார் - இராமானுச நூற்றந்தாதி 108
நான்காவதாயிரம்
நம்மாழ்வார் - திருவாய்மொழி 1102 ஆகிய பாடல்களைக் கொண்டது.

ஆழ்வார்கள் என்ற பெயர் காரணம் மிகவும் சுவையானது. வேதம் என்ற ஆரியச் சொல்லை விட "மறை" என்ற தமிழ்ச் சொல் பொருள் நிறைந்தது. மறைந்து உள்ள பொருளைப் பற்றியது மறை. மறை தேடும் ஞானம் எல்லோருக்கும் வருவதில்லை.

மறைந்து கிடக்கின்ற எல்லாப் பொருள்களையும் ஆழ்ந்து அறியும் தன்மை உடையவர்கள் ஆதலால் ஆழ்வார் எனப்படுவர். பண்டைய உரை ஆசிரியர்கள் ஆழ்வார்களை, "எம்பெருமானுடைய மங்கல குணங்களில் ஆழங்காற்படுபவர்கள்" என்றனர். ஆழங்காற்படும் அறிவாவது, வேதத்தாலும் அளவிட்டறிய முடியாத எம்பெருமானின் எல்லாக் குணங்களையும் அவனருளால் அறிந்து அனுபவிக்கும் ஞானமாகும்.

இத்தகைய ஆழ்ந்த அறிவுடைய ஆழ்வார்கள் செய்வித்ததுதான் தெய்வத் தமிழ் பாசுரங்கள். ஆழ்ந்தறியத்தக்க சொல் நயம், பொருள் நயம் உடைய கவிதைகள் அவை. இவற்றிற்கு பொருள் சொல்ல முற்பட்டதன் விளைவுதான் வைணவ பரம்பரையில் உள்ள சுவை மிகுந்த வியாக்கியானங்கள். வியாக்கியானங்களுக்காக பாசுரங்களா? இல்லை, பாசுரங்களுக்காக வியாக்கியானமா? என்று மயங்கும் அளவில் ஒன்றை ஒன்று சார்ந்து, ஒன்றை ஒன்றும் விஞ்சும் தன்மையாயின. (வளரும்)

# விண்வெளியில் விவசாயம்

பூமியில் இருந்த விவசாய நிலங்களையும் காடுகளையும் முன்னேற்றம் என்ற பெயரில் நாம்தான் அழித்தோம். இப்போது காற்றே இல்லாத விண்வெளியில் விவசாயம் செய்து உணவு தயாரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது நமக்கு'

ஆம், சர்வதேச விண்வெளி நிலையத்தில் விரைவிலேயே காய்கறிகளை பயிரிட்டு அதை உணவாக்கிக் கொள்ளும் நடைமுறையை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான "நாசா" கொண்டுவர இருக்கிறது.

பூமியில் இருந்து கிட்டத்தட்ட 435 கிலோ மீற்றர் உயரத்தில் மிதந்து கொண்டிருக்கிறது சர்வதேச விண்வெளி நிலையம். இங்கிருந்து விஞ்ஞானிகள் அங்கு சென்று, பல நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் மிக முக்கியமாக, அன்றாட உணவுகள் அனைத்தும் பூமியில் இருந்துதான் செல்கின்றன. அப்படி ஒரு நாள் உணவை அனுப்பி வைக்கவே சுமார் ஆறரை இலட்சம் ரூபா செலவாகிறதாம். எனவேதான், விண்வெளி நிலையத்தில் இருப்போருக்கான உணவை அங்கேயே பயிரிட்டு வளர்த்துக் கொள்ளும் ஆராய்ச்சியை நாசாவோடு இணைந்து கையில் எடுத்திருக்கிறது அமெரிக்காவைச் சேர்ந்த கென்னடி விண்வெளி மையம்.
இதற்காக அவர்கள் தேர்த்தெடுத்திருக்கும் பயிர், ரொமைன் லெட்டூஸ் எனும் ஒருவகை இலைக்கோஸ்.

"எந்த சூழ்நிலையையும் சமாளித்து வளரும் பயிர் இது. விண்வெளியில் இதை வளர்க்க விசேட செடி வளர்ப்பு தொட்டியையும் வடிவமைத்திருக்கிறோம். இந்தத் தொட்டியில் உள்ள சிவப்பு, நீலம் மற்றும் பச்சை நிற எல்.ஈ.டி மின்குமிழ்கள், சூரிய வெளிச்சத்தின் வேலையைச் செய்யும். மேலும் செடிகளில் ஈரப்பதத்தை தக்கவைக்க விசேட தண்ணீர் பாசன முறையையும் இணைத்திருக்கிறோம். இது தண்ணீர் சிக்கனத்தையும் மனதில் வைத்து உருவாக்கப்பட்டது!" என்கிறார் இந்த வேலைத்திட்டத்திற்கு தலைமை ஏற்றிருக்கும் ஜியோயா மஸ்ஸா.

இந்த விண்வெளி பயிரிடலுக்காக மைக்ரோவேவ் அவண் அளவே உள்ள ஒரு "விவசாயத் தொட்டி" உருவாக்கப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் 09 ஆம் திகதி வாக்கில் ஸ்பேஸ் எக்ஸ் சி.ஆர்.எஸ் 3 என்ற விண்கலம் மூலம், அது சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படவும் இருக்கிறது.
"ஆனால், எடுத்த எடுப்பில் இந்தச் செடியை வளர்த்து விண்வெளியில் உள்ள விஞ்ஞானிகள் சாப்பிட்டுவிட முடியாது. முதலில், நாங்கள் சொல்லும்படி இந்தச் செடியை வளர்த்து பறித்து, அவர்கள் பூமிக்கு அனுப்பி வைப்பார்கள். பூமியல்லாத வேறு சூழலில் வளர்த்ததால், அதில் வேறு ஏதேனும் மனிதனுக்குத் தேவையில்லாத மூலக்கூறுகள் உள்ளதா என நாங்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்துவோம். உண்ணலாம் எனத் தெரிந்த பிறகே இதைச் சாப்பிட அனுமதிப்போம்" என்கிறார் இன்னொரு பொறுப்பாளரான ஹோவார்ட் லெவின்.

"வெஜ்ஜி" எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், விண்வெளியில் வெற்றிகரமாக விவசாயம் நடக்கும். யார் கண்டது? அங்கிருந்த மரக்கறிகள் இங்கு இறக்குமதி செய்ய வேண்டிய நிலை கூட வரலாம்.●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்













- **மரண அறிவித்தல்கள்**
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor


**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..



On high, with your thoughts

PRO MAR Ltd.

- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

Vivek Subra
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!




One stop for all your promotional needs.

PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

## Why think so long...?



Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


Homelife/Future
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated











# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# 139 NOT OUT: சில சுவையான தகவல்கள்!





இஷாந்தின் ஒரே ஓவரில் காலியான அன்றைய 3வது ஒருநாள் போட்டியில் தோனியின் அபார Match Winning 139 Runs இன்னிங்ஸ் சில சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இதற்கு முன்னால் 6ஆம் நிலையில் களமிறங்கி அதிக ரன்களை அடித்தது கபில்தேவ்தான். அவர் 1983ஆம் ஆண்டு பெரிதும் பேசப்பட்ட ஜிம்பாவே போட்டியில் 17/5 என்ற நிலையிலிருந்து 175 ரன்கள் விளாசி போட்டியை வெற்றிப் பெற்றுத் தந்தார். அதன் பிறகு ஆண்ட்ரு சைமன்ட்ஸ் 2003 உலகக் கோப்பையின்போது பாகிஸ்தானுக்கு எதிராக ஜோகன்னஸ்பர்கில் இதே 6ஆம் நிலயில் இறங்கி 143 விளாசினார். அதன் பிறகு தற்போது தோனி 139 நாட் அவுட்.

கபில்தேவ் 1983ஆம் ஆண்டு ஜிம்பாவேயிற்கு எதிராக 17/5 என்ற நிலையிலிருந்து 175 ரன்களை விளாசியதை எல்லோரும் கமெண்டரியில்தான் கேட்டிருக்க முடியும், அந்த இன்னிங்ஸ் எப்படி இருந்திருக்கும் என்பதை தோனியின் இன்னிங்ஸ் மூலம் ஒருவர் ஊகிக்க முடிகிறது.

தோனி சதம் எடுத்தபோது இந்திய கேப்டன் என்ற முறையில் ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் 5000 ரன்களை எடுத்தார். இதற்கு முன்பு கேப்டனாக அசாருதீன், கங்கூலி 5000 ஒருதினப்போட்டி ரன்களை எடுத்துள்ளனர். ஆனால் தோனி 127வது போட்டியில் இதனை எடுத்து அவர்களிருவரையும் முந்தினார்.

வீரத் கோலி அடித்த அரை சதம் தொடர்ச்சியான அரை சதம் ஆகும். 4 அல்லது மேற்பட்ட அரைசதங்கள் மற்றும் அதற்கு மேலான ரன்களை தொடர்ச்சியாக 3 முறை எடுத்த வீரர்களில் 3வது இடம்பிடித்துள்ளார். இதற்கு முன்பு ஆஸ்ட்ரேலியாவின் மார்க் வாஹ் மற்றும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தொடர்ச்சியான 4 அரைசதங்களை 3 முறை அடித்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலிய கேப்டன் ஜார்ஜ் பெய்லி, வாட்சன் பந்தில் ஒரு வெகு சுலபமான ஹை கேட்சை தரையில் வழியவிட அதன் பிறகு 34 ரன்களை விளாசினார் தோனி.

2008ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோனி 124 ரன்கள் எடுத்ததுதான் இந்திய கேப்டன் ஒருவரின் ஆஸி.க்கு எதிரான அதிகபட்ச ஸ்கோராக இருந்தது. அதனையும் உடைத்தார் தோனி.
கடைசி ஓவரை ஜேம்ஸ் பாக்னர் வீச வர முதல் பந்தை மிட்விக்கெட்டில் விளாச பவுண்டரி. அடுத்த பந்து DEEP POINT அடித்து ரன் ஓடவில்லை. அதற்கு அடுத்த பந்துதான் தோனியிடம் ரசிகர்கள் எதிர்பார்த்த ஹெலிகாப்டர் ஷாட் வந்தது. பாக்னர் யார்க்கர் ஒன்றை வீச அதனை ஒரு ஒரு காலைத் தூக்கிக் கொண்டு விளாச பந்து LONG ON சிக்சருக்குப் பறந்தது. அடுத்த பந்து இந்தப்பக்கம் LONG OFF பெரிய சிக்சர். கடைசி பந்து பவுண்டரி. 21 ரன்களை வழியவிட்டார் பாக்னர். 12 பவுண்டரி 5 சிக்சர்களுடன் தோனி 122 பந்துகளில் 139 ரன்கள் எடுத்து நாட் அவுட்டாக திகழ்ந்தார்.●


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available



647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]
Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

## வீடு வாங்க விற்க

**ஈசன் குலசேகரம்**
Sales Representative
**416 835 1700**
info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage

**விக்கி வேலாயுதன்**
Sales Representative
**416 457 7162**
vvelauthan@yahoo.com

அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.**esanhomes**.com

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

81


வெள்ளிப் பணத் தொடரில் இம்முறை வாழ்க்கைத் தரமும் (Standard of Living) சிறந்த வாழ்வுக்கான வசதியும் (Quality of Life) பற்றிக் கூறப்படுகிறது. இவை இரண்டும் ஒரு நாட்டின் மக்களின் சிறந்த வாழ்க்கைக்குரிய கணிப்பீடுகளைச் செய்யும் ஒரு அளவீட்டு முறையாக அமைகின்றது.

இரு வாரங்களுக்கு முன்னர் வெளியான புள்ளிவிவரத்தின்படி, கனடா உலகில் வாழ்வதற்கான நாடுகளில் 5ஆவது இடத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இத்தகைய கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு சிறந்த வாழ்க்கைத் தரமும், சிறந்த வாழ்வுக்கான வசதி வாய்ப்புக்கள் போன்ற கணிப்பீடுகள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினைக் கணிப்பீடு செய்யும் விடயங்களாக பின்வருவன அமைகின்றன:
நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி
தனிநபரின் வருமான அளவு
கல்வி, தொழிற் தேர்ச்சிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு கிடைக்கும் அளவு
வாரத்தில் அல்லது மாதத்தில் வேலையும் மணித்தியாலத்தின் அளவும், அதனைக் கொண்டு மக்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் தன்மையும்.
விலைவாசி உயர்வின் தன்மை
வறுமையில் வாழும் மக்களின் தொகை, மொத்த சனத்தொகையின் என்ன விகிதாசாரத்தில் இருக்கின்றது.
எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய தரமான சுகாதார வசதி
வாழ்வதற்குத் தரமான வீட்டு வசதியும், அது எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் தன்மையும்.
தரமான கல்வி வசதி
தேசிய பொருளாதார வளர்ச்சி
பொருளாதார, அரசியல் ஸ்திரம்
மக்களுக்குப் பாதுகாப்பான நாடாக இருத்தல்
காலநிலையும், சுற்றுச்சூழலும் சுத்தமாக இருத்தல்.
நாட்டின் சனத்தொகையில் மக்கள் எத்தனை வயதுவரை வாழ்கின்றார்கள் (Life expectancy)

இதுபோன்று சிறந்த வாழ்வுக்கான வசதி வாய்ப்புக்கள் (Quality of life) என்பன பற்றி ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமை அமைப்பு பின்வரும் கணிப்பீடுகளை முன்வைக்கிறது.
நாட்டின் எல்லா மக்களுக்கும் சரிசமமான சட்டங்கள்
அடிமைத்தனத்திலிருந்தும், சித்திரவதைகளிலிருந்தும் விடுதலை பெற்று வாழும் மக்கள் உள்ள நாடாக இருத்தல்
எல்லோருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை
விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை
விரும்பிய வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கான உரிமை
இனம், மொழி, சமயம், நிறம், ஆண் பெண் வேறுபாடுகள் அற்ற முறையில் எல்லோரையும் சமமாக நடத்தும் தன்மை
எல்லோருக்குமான வாக்குரிமை போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.
முதலாவதான வாழ்க்கைத் தரத்தினை (Standard of Living) கணிப்பதில் பெரும்பாலும் பொருளாதார குறிகாட்டிகளும், இரண்டாவதாக சிறந்த வாழ்வுக்கான வசதி வாய்ப்புக்கள் (Quality of Life) சமூக குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டனவாக அமைந்திருக்கின்றது. எனவே, இவை இரண்டும் உள்ளடக்கிய விடயங்களில் சிறப்பாக அமைந்திருக்கின்ற நாடுகள் மக்கள் வாழ்வதற்கு சிறந்த நாடாக கணிக்கப்படுகின்றன.●

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
36 வருட அனுபவம்

HONDA
TOYOTA
GM-MINI VANS
We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets

தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## உயர் இரத்த அழுத்த...

இல்லாததால் ஏற்பட்ட களைப்பு என்றும் எண்ணுவார்கள். ஆனால் களைப்பு என்பது உடல் நோய்களால் மட்டும் வரும் என்றில்லை. மனம் சோர்ந்திருந்தாலும் களைப்பு ஆகவே உணர்வார்கள். நோயாளிகள் களைப்பு என்று சொன்னால் அது எதனால் ஏற்படுகிறது என்பதை மருத்துவர்கள் ஆராய்ந்து கண்டறிய நேரும்.

சாய்ந்து படுத்திருக்க முடியாது எழுந்து படுக்கையில் உட்கார வேண்டிய நிலையும் சிலருக்கு ஏற்படுவதுண்டு. இதனால் தலையணைகளை வைத்து தலையையும் நெஞ்சுப் பகுதியையும் உயர்த்திப் படுப்பார்கள். ஆனால் ஆஸ்த்மா நோயிலும் இத்தகைய நிலை ஏற்படலாம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஆயினும் காலம் செல்லச் செல்ல கால் வீக்கம், உடல் எடை அதிகரித்தல், ஈரல் வீக்கம் அதன் காரணமாக வயிற்று வலி போன்ற அறிகுறிகளும் இருதய செயலிழப்பினால் தோன்றும்.

அஞ்சைனாவை ஒத்த நெஞ்சு வலியானது உயர் இரத்த அழுத்த இருதய நோயாலும் ஏற்படும். நெஞ்சில் பாரம், அழுத்துவது அல்லது இறுக்குவது போன்றவை அத்தகையவையாகும். இந்த வலியானது கழுத்திற்கு, தாடைக்கு, இடது புஜத்திற்கு அல்லது முதுகின் மேற்புறத்திற்கு பரவுவது போல இருக்கலாம். மாரடைப்பு போல் அல்லாமல் அஞ்சைனா வலியானது 10-15 நிமிடங்களுக்குள் தணிந்துவிடும்.


ஆனால் வலி இல்லாமல் நடக்கும்போது இளைப்பு, கடுமையான களைப்பு போன்ற அறிகுறிகளுடனும் அஞ்சைனா வலி வரக் கூடும். பெண்களிலும், நீரிழிவு உள்ளவர்களிலும் வலி இல்லாது இத்தகைய அறிகுறிகளுடன் வருவது அதிகம்.

மாரடைப்பும் வரக் கூடும்.
இருதயத் துடிப்பின் ஒழுங்கின்மை.
இருதயமானது ஒரு லயத்தில் தொடர்ந்து துடித்துக் கொண்டிருக்கும். ஆனால் அவற்றின் லய ஒழுங்கு மாறுவதும், தாறுமாறாக அடிப்பதும் நிகழக் கூடும். மருத்துவத்தில் Cardiac arrhythmias என்பார்கள்.
இது நெஞ்சுப் படபடப்பு, திடீர் மயக்கம், நெஞ்சு வலி போன்ற பல்வேறு அறிகுறிகளுடன் வெளிப்படக் கூடும். திடீர் மரணம் ஏற்படுவதும் உண்டு.

உயர் இரத்த அழுத்த இருதய நோயால் இவ்வாறான பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.●

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**
**Small Business Income Tax**
**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com


# நீத்தார் நினைவு

## 'வெற்றிமணி' ஸ்தாபகரின் மனைவி ஆசிரியை நவநிதி சுப்பிரமணியம்



குரும்பசிட்டியின் புகழ்பெற்ற ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்ந்தவரும், 'வெற்றிமணி' சஞ்சிகையை ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபித்து நடத்தியவருமான (அமரர்) மு. க. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான நவநிதி (செல்வரத்தினம்) சுப்பிரமணியம் அவர்கள் கடந்த மாதம் கொழும்பில் காலமானார். இவரது ஐந்து பிள்ளைச் செல்வங்களில் மூத்தவரான மு.க.சு சிவகுமாரன் தற்போது ஜேர்மனியிலிருந்து 'வெற்றிமணி'யை மாதாந்த இதழாக வெளியிட்டு வருகின்றார்.

தமது பிள்ளைகளுடன் அன்பாகவும் இன்சொல் பேச்சினால் மகிழ்வாகவும் தமது காலத்தைக் கழித்த நவநிதி அம்மையார், அவ்வப்போது வெளிநாடுகளுக்குச் சென்று தமது பிள்ளைகள் மருமக்கள் பேரப் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தவர். தமது ஓய்வூதியப் பணத்தை அறநெறியிலும், அறிவான விடயங்களிலும் செலவிட்டு அதில் பேரின்பம் கண்டவர்.

முதுமையை ஒரு சுமையாகக் கருதாமல் அதனைப் பயனுள்ளதாக ஆக்கவேண்டுமெனக் கருதி பயனுள்ள பல நூல்களை வாசிப்பதில் கழித்து ஆன்ம ஈடேற்றம் பெற்று வந்தார். 1947ல் கோப்பாய் ஆசிரய கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய இவர், மாத்தளை, நாவலப்பிட்டி, வெலம்பொடை, பூண்டுலோயா, பலாலி, நவாலி, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் கற்பித்துவிட்டு, இறுதியில் தமது கணவரின் ஊரில் அமைந்துள்ள பொன். பரமானந்தர் வித்தியாசாலையில் பணியாற்றி 1978ல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

முப்பதாண்டுகால ஆசிரிய சேவையில் பல்லாயிரம் மாணவமணிகளின் அறிவுக் கண்களைத் திறந்துவிட்ட பெருமைபெற்ற நவநிதி சுப்பிரமணியம் அவர்கள் கடந்த மாதம் 3ஆம் திகதி கொழும்பில் காலமானார். இந்த மாதம் 3ஆம் திகதி ஞாயிறன்று கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இவரது 31ம் நாள் நிகழ்வு நடைபெற்று மதிய போசனத்துடன் நிறைவுபெற்றது.

## றொறன்ரோ நகர தீயணைப்பு படைக்கு மேலும் 41 பேர் சேர்ப்பு

றொறன்ரோ நகர தீயணைப்புப் படைக்கு மேலும் புதிதாக 41பேர் கடந்த மாதம் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களில் பெண்களும் அடங்குவர்.

## வெளிநாட்டுச் சிறைகளில் 1590 கனடியர்!

கனடியர்களான 1590 பேர் உலகின் பல பாகங்களிலுள்ள நாடுகளின் சிறைகளில் இருப்பதாக செய்தியொன்று தெரிவிக்கின்றது. இவர்களைத் தாமதமின்றி மீட்பதில் கனடிய வெளிநாட்டுத் தூதரகங்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

"இடம்பட வீடெடேல்"

# BUY/ SELL/ INVEST

**உங்கள் தேவையை நிறைவு செய்ய**
**நம்பிக்கையுடன் நாடுங்கள்**



**Karthi Kantharupan,** B.A
Sales Representative

**Dir: 416-895-4283**
Email: kanthan15@hotmail.com

- Free Market Evaluation
- Flexible Commission
- Friendly and Professional
- Free Home Inspection
- Helping you find the home of your dreams
- Buying real state is the best way to become wealthy

*HomeLife/Future Realty Inc., Brokerage**
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201- 9977 Fax: (905) 201-9229

*Independently Owned and Operated

HOMELIFE
HIGHER STANDARDS

***Higher Standards Agents ....Higher Results!...***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனாஸ் & கோ

**அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்**

பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்


All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos

"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"

**416-292-0033 www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 10A Scarborough (One Block North of Finch)**

# SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"



**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**




*Sabesan's Choice*

**416 605 1990**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Prime Minister is right: Going to Sri Lanka would legitimize the regime



HUGH SEGAL

Prime Minister Stephen Harper has announced that he will not be attending the Commonwealth Heads of Government Meeting in Sri Lanka, consistent with concerns he expressed on Sri Lanka in the fall of 2011.

As he pointed out, this was not an easy decision. Canada was one of the founding nations of the Commonwealth. All governments know and understand that there is a certain diplomatic simplicity in "going along to get along." No confrontation, no hard feelings. But on this issue, the Commonwealth has sadly taken the path of least resistance. This is no credit to the Secretary General, the Commonwealth Secretariat or the member countries.

The Commonwealth Heads of Government Meeting is far more than a few days for heads of state to gather. It is at this meeting where the host country becomes the Chair-in-Office of the Commonwealth of Nations, the effective leader country for two years. Until 2015, Sri Lanka will chair the foreign ministers meetings and have a seat on the Commonwealth Ministerial Action Group, the body charged with investigating human rights, democracy, judicial, or journalistic independence violations.

In the run-up to CHOGM, the Bar Associations of Canada, Australia, England & Wales, Sri Lanka, South Africa, the Commonwealth Judges & Magistrates Association and numerous others; Human Rights Watch, Amnesty International, the Committee to Protect Journalists, the UN High Commissioner for Human Rights Navi Pillay, to name but a few, have all cited deep concern with the human rights, judicial independence and freedom of the press situation in Sri Lanka. The former chief justice of South Africa, Pius Langa, stated in his legal opinion – which was commissioned, and then suppressed, by the Secretary General – that the impeachment of the chief justice of Sri Lanka was illegal, unconstitutional and "sowing the seeds of anarchy." All of this after the celebration of The Queen signing the Charter of the Commonwealth in March of this year – a document that lists and outlines all of the principles and values for which the Commonwealth stands.

As Canada's Special Envoy to the Commonwealth and the Canadian representative on the Commonwealth Eminent Persons Group which authored The Commonwealth of Nations: Time for Urgent Reform, I went to Sri Lanka as a fact finder for our foreign minister in April of this year. I saw wonderful new highways and buildings in Colombo that would rival those in Toronto. I also saw the bullet holes above the sofa in the office of the editor of a Tamil language newspaper in Jaffna. Days after we visited the paper, its offices were trashed and employees beaten. I met with individuals in displacement camps who had been there for years with no hope of returning home because their land had been appropriated to build housing for military families. I saw soldiers walk in as we walked out to "chat" with those who spoke to us. We were followed wherever we went and had to "lose" our escorts in order to speak to people who were afraid for their lives. Christian, Muslim and Tamil leaders all spoke of persecution and intimidation. There was scant if any evidence of any reconciliation or efforts of any accountability.

I understand that bilateral relationships between countries are important for a host of reasons and that diplomacy is and should always be the first course of action. Australia needs to turn a blind eye to Sri Lanka's excesses as it seeks to send migrants back or keep them from coming. The Commonwealth of Nations is a voluntary organization that is not bound by contract or treaty. No country is perfect, but the Commonwealth of Nations holds together because member countries strive to uphold the values and principles of democracy, rule of law, good governance, human rights, judicial independence and freedom of the press. For the Commonwealth of Nations to bestow the honour on Sri Lanka of hosting CHOGM and presiding over the organization as its chair for two years legitimizes a multitude of sins and is the surest way to weaken the Commonwealth and bring its credibility into serious disrepute.


Mr. Harper made the right decision. His presence in Colombo would be viewed as tacit approval of Sri Lanka's chairmanship and make a mockery of all those values and principles signed by The Queen in March. The people of Sri Lanka have Canada's unwavering support. The government of Sri Lanka needs to keep its promises of reconciliation, resettlement and peaceful coexistence for all Sri Lankans. The way to strengthen the Commonwealth is not to look the other way and ignore reality but to face it straight up and act accordingly.

*Hugh Segal is a former member of the Commonwealth Eminent Persons Group and is Canada's Special Envoy to the Commonwealth.*

Courtesy: The Globe and Mail (Oct. 08, 2013)●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301